3-2-1952 M.V.M BANGALORE 2

போர்வாள்

2-2-52 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:
காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன் B.A.Hons

துணை ஆசிரியர்:
காஞ்சி. கல்யாணசுந்தரம்

விலை அணா 2

வெற்றிப் பட்டியல் பாரீர்!

வாகை சூடினர் வீரர்கள் காணீர்!

★

திராவிடநாடு திராவிடருக்கே!—இதுதான் நமது இருதய கீதம்.

வடநாட்டின் இரும்புப் பிடியிலிருந்து விடுபட்டு, தென்னாடு, சுதந்தர சமதர்மத் தனியரசு செலுத்த வேண்டும்—இதுதான் நமது இலட்சிய முழக்கம்.

டில்லி ஏகாதிபத்யத்தின் எடுபிடியாக, ஏவலனாக, பணியாளனாக இருந்து வதையும் இழி நிலை இனியும் இருக்கக்கூடாது திராவிடத்துக்கு! திராவிடம் தலை நிமிர்ந்து வாழவேண்டும்! சுதந்தர புருஷனாக உலவ வேண்டும்!—இதுதான் நமது உள்ளத்தைக் கவர்ந்த உன்னதமான குறிக்கோள்.

ஆம்! இந்த இருதய கீதத்தை நடைமுறை நாதமாக்குவதற்காகத்தான், திராவிட முன்னேற்றக் கழகம், ஓய்வு ஒழிவின்றிப் பணியாற்றி வருகிறது.

ஆயிரமாயிரம் இளைஞர்கள், ஆள்வந்தார்களின் அடக்குமுறைகளையெல்லாம் தூசு என ஒதுக்கித் தள்ளிவிட்டு, இரவு பகலெனப் பாராது அருந்தொண்டாற்றி வருவது, இந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காகத்தான்.

சொல் ஏர் உழவர்கள் பல்லோர் திக்கெட்டும் சென்று, திடநெஞ்சுடன் நின்று, இடிமுழக்கமென வார்த்தைகளை எழுப்பி, எதிரிகள் கோட்டைகளையெல்லாம் தூள்தூளாக்கிவருவது, இந்த உயரிய குறிக்கோளை விரைவில் அடையவேண்டும் என்பதற்காகத்தான்.

தென்னாட்டுப் பெர்னாட்ஷா அண்ணாதுரை தன் ஒப்பற்ற சொல்லாலும் இணையற்ற எழுத்தாலும் புகழ்மிக்க செயலாலும் கூர்மைமிக்க அறிவுத் திறத்தாலும் திராவிட இயக்கத்தைத் தன் கண்ணின் மணியெனக் காத்து வளர்த்துவருவது திராவிடத் தனியரசை உருவாக்குவதற்காகத்தான்.

ஆகவேதான், நமது மத்யைத் தீர்மானம், யார் யார், திராவிடத் தனியரசுப் பிரச்சினைக்காகச் சட்டசபையிலும் பாராளு மன்றத்திலும் போராடுவேன் என்கிற உறுதிமொழியை உள்ளன்புடன் அளிக்கிறார்களோ அவர்களை மட்டும் இந்தப் பொதுத் தேர்தலிலே அதிகாரபூர்வமாக ஆதரிப்பது என்கிற சிறந்த முடிவை நாட்டிற்கு அளித்தது.

நாம் கேட்ட அந்த உறுதி மொழியை அளித்து, திராவிடத் தனியரசுப் பிரச்சினையிலே தங்கட்குள்ள தணியாத காதலைத் தெரிவித்து, பொதுமக்களின் ஆதரவை அமோகமான அளவில் பெற்று, வெற்றி மாலை சூடியுள்ள வீரர்களின் பெயர்கள் கீழே தரப்பட்டிருக்கின்றன.

உதிரிகளப்பா இவர்கள்!—கேலி செய்தனர் சிலர்!

இதுகளாவது வெற்றி பெறுவதாவது!—சாபம் தந்தனர் சிலர்!

கண்ணீர்த் துளிகள் பக்கம் செல்லாதீர்! ஆபத்து!—இவர்களைத் தடுத்துப் பார்த்தனர் வேறு சிலர்!

என்னிடம் ஒரு தினசரி இருக்கிறது! ஜாக்கிரதை! தி. மு. க. வோடா சேர்க்கிறீர்கள்!—மிரட்டிப் பார்த்தனர் சில குத்தூசிகள்!

கேலி, கிண்டல், மிரட்டல், பயமுறுத்தல், எச்சரிக்கை, எதுவும் பலன்படவில்லை.

வீரகீதம் பாடிபாடி வெற்றிமங்கை, நம் ஆதரவாளர்களின் காலடியிலே வந்து தஞ்சம் புகுவதை யாராலும் தடுக்க முடியவில்லை.

வெற்றிமாலை சூடியுள்ள இவ் வீரர்களையெல்லாம் மனமாரப் பாராட்டுகின்றோம்.

இவர்களின் வெற்றிக்காகச் சென்ற ஒரு மாதகாலமாக ஈடு இணையற்ற முறையில் பணியாற்றிய இயக்கத் தோழர்களையெல்லாம் வாழ்த்துகிறோம்,

(5-ம் பக்கம் பார்க்க)

[சிந்தனைச் சித்திரம்]

கயல் விழி

[காழி. கலைச்செல்வன்]

பாண்டியன் கூறுகிறான் :—

"நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை அவ்வாறு நடக்குமென்று. ஆனால் நடந்துவிட்டது. அந்த நிகழ்ச்சி இப்பொழுதும் என் கண் முன்னேநின்று நர்த்தனமாடுகிறது. என் கண்ணின் கரு மணியென அவளைப் பாதுகாத்தேன்; அன்புடன் வளர்த்தேன். தாயும் தந்தையும் இல்லாத பெண் என்பதற்காகத் தனிச்சலுகை தந்தேன். அவள் முகம் மலரும்போது எனதகம் மலரும். அவள் மகிழும் போது நான் மகிழ்வேன். ஆம்! அவள்தான் எனது உடன் பிறந்த இரத்தம்—என் தங்கை கயல் விழி.

தாயும் தந்தையும் இறந்த பிறகு அவளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எனக்கு ஏற்பட்டது. அன்று முதல் இன்று வரை அந்தக் கடமையினின்று வழுவாமல்தான் நடந்து வருகிறேன். அவளும் இத்தனை நாளாக எனக்கு அடக்கத்துடன் அடங்கி வணக்கத்துடன்தான் வாழ்ந்தாள்.

'நீயுந்தான் இருக்கே பெண்ணென்று! பக்கத்துவீட்டுக் கயல் விழியும் உன்னைப்போன்ற பெண் தானே! அவளைப் பார்த்தாவது நீ பாடம் கற்றுக்கொள்ளக்கூடாதா? அடடா அவளுக்குத்தான் எத்தனை அடக்கம்! என்ன பணிவான பேச்சு! அன்பான முகம்!'—என்று அடுத்த வீட்டுக்காரர்கள் தங்கள் பெண்களைக் கோபிக்கும்போது, என் தங்கைக்கு வழங்கும் இவ்வித நற்சாட்சிப் பத்திரங்களைக் கேட்கும்போது, என் இதயமெலாம் பூரிக்கும். ஆனால்இன்றோ அவளைப்பார்க்கவும் என் கண்கள் கூசுகின்றன. என் உள்ளமோ வேதனைக் கீதம் இசைக்கிறது. பாண்டியன் தங்கை கயல் விழியா அவ்வாறு நடந்தாள் என்று என் இதயம் கேள்வி எழுப்புகிறது.

அவள் வாழ்க்கையிலே வளம் பெருக வேண்டும், காலை மலர்ந்து மாலை உதிரும் மலராகக் கூடாது அவள் வாழ்வு என்று தான் எண்ணினேன். அன்பின் அடிப்படையிலே வளர்த்தேன். எதிர்கால வாழ்க்கையை எப்படிநடத்த வேண்டும் என்பதை அவள்புரிந்து கொள்ள வேண்டுமே என்பதற்காகத்தான் 'குடும்ப விளக்கு' என்ற நூலைப் படிக்குமாறு செய்தேன். திருக்குறள் அளித்தேன். நாலடியார் சொல்லிக் கொடுத்தேன். அவள் அறிவு வளருவது கண்டுஅக மகிழ்ந்தேன். ஆனால் இன்று...? அகங்காரியாகி அடக்கத்தை அடகு வைக்கிறாள். எனக்கு வாழத்தெரியும், பாதையும் அமைத்துக்கொள்ளத் தெரியுமென்கிறாள் கோதை! போதையேறிய அவளுடைய அந்தச் செய்கை அதைத்தான்எனக்கு வலியுறுத்துகிறது.

அன்புத் தங்கை என்று அருமையுடன் வளர்த்ததற்கு அவள் உரிமையுடன் காட்டும் வாஞ்சையிது!

அவன் மட்டுமென்ன? அவனும் அப்படித்தான். அவன்தான் என் ஆருயிர் நண்பன் சலீம். அவனும் நானும் சிறு வயது முதல் ஒத்த அன்புடன் பழகிவந்தோம். அவனுடைய செய்கையும் நம்பமுடியாமல்தான் இருந்தது. இன்று அவன் எனக்கு ஆருயிர் நண்பனாகத் தோன்றவில்லை, நஞ்சேந்தியிருக்கும்தங்கக் கோப்பை போல் தோன்றுகிறான்.

அவள் என் தங்கை, அவன் என் நண்பன். அவள் என் உடன் பிறந்தவள். அவன் என் உடன் பிறக்காவிட்டாலும் உயிரால் நாங்கள் இருவரும் ஒன்றுதான். ஆனால் இன்று அவர்கள் இருவரும் நடந்து கொண்டவிதம்தான் என் உள்ளத்தை உடைத்தது. கோபத்தை உண்டாக்கியது.

சலீம் எங்கள் வீட்டிற்கு அடிக்கடிவருவான். மணிக்கணக்காகப் பேசிக்கொண்டிருப்போம். நண்பன் நகைச்சுவையுடன் பேசுவதிலே திறமையுடையவன். இடையிடையே தங்கை கயல்விழியும் கலந்துகொள்வாள். அவள் உள்ளம்விட்டுசிரிப்பாள். அந்தச் சிரிப்பிலே நான் இன்பமடைவேன். அளவுக்கு மீறிய உரிமையும் தந்தேன். அதன் பலன்......!

அன்று காலையிலே ஆபீசுக்குச் சென்ற நான் மாலைக்கு முன்னே வீடு திரும்பினேன். அன்று ஒரு புதுப்படம்: அந்தப் படத்திற்குக் கயல் விழியையும் அழைத்துச் செல்லலாம் என்றே விரைவாக வீடு திரும்பினேன்.

வீட்டின் வாயிற்படி ஏறினேன். கதவு மூடியும் மூடாமலும் இருந்தது. 'கயல்விழி' என்று அழைத்துக் கொண்டே கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தேன். மறு வினாடி திகைத்து நின்றேன். நான் உட்காரும் நாற்காலியில் சலீம் உட்கார்ந்திருந்தான். அவன் அருகே கயல் விழி நின்று கொண்டிருந்தாள். அவளுடைய கரங்கள் அவனுடைய இரு கரங்களையும் பற்றிக் கொண்டிருந்தன. என்னைக் கண்டவுடன் கைகளைத்திடீரென்று விடுவித்துக் கொண்டு உள்ளே ஓடினாள் கயல்விழி.

சலீம் பேசாமல் எழுந்து நின்றான். அடுத்த வீட்டானின் தோட்டத்திலே புகுந்து கனி பறித்துக் கொண்டிருக்கும்பொழுது தோட்டக்காரன் அவன் எதிரிலே வந்து நின்றால் கனி பறித்துக் கொண்டிருந்தவனின் நிலை எப்படியிருக்குமோ அப்படி இருந்தது அவனுடைய நிலை. ஆம்! சலீமின் வதனத்திலே பயமும், பரிதாபமும் போட்டியிட்டுக் கொண்டு படர்ந்தன. என் இதயம் குமுறும் எரிமலையாயிற்று; கொந்தளிக்கும் கடலாயிற்று; 'விர்'ரென வீசும் புயலாயிற்று. சினத்தின்சிகரத்திற்குத்தாவினேன்நான். "ஊம் எத்தனை நாளாக இந்த நாடகம்"— என்னையறியாமல் இந்த வார்த்தைகளை என் வாய் உதிர்த்தது.

அவன் தலை குனிந்து நின்றான். அவனுடைய உடலும் உள்ளமும் குன்றின. என் உணர்ச்சியை என்னால் முடிந்தவரை அடக்கினேன்; முடியவில்லை. 'நன்றிகெட்ட நாயே' என்று, அவனைப் பார்த்துச் சீறினேன். என்னை ஏறெடுத்துப் பார்க்காமல் வெளியேறினான் சலீம். நான் அப்படியே சாய்வு நாற்காலியில் சாய்ந்தேன்.

பரம்பரை பரம்பரையாக மாசின்றி வளர்ந்து வந்த எங்கள் குடும்பத்தில் அழியா இரத்தக்கறை ஏற்படுத்த நினைத்தாள் என் தங்கை. அவன் மூஸ்லீம்; இவள் இந்து. இருவருக்கும் காதல்! என்ன அவமானம்! காதலாம்—காதல்! இதை நினைக்கும் போது என் உள்ளம் துன்பப் பனியால் உறைந்தது. கயல் விழி ஒரு அவமானச் சின்னமாகத் தோன்றினாள் என் கண் முன்னே.

என் சிந்தனை சிதறியோடியது. கையிலே காப்பியுடன் அடுப்பங்கரையிலிருந்துவந்தாள் கயல் விழி, நான் பேசாமல் எங்கேயோ பார்ப்பது போல் பார்த்துக் கொண்டிருந்தேன். "அண்ணா" என்றாள் கயல் விழி. அவள் குரல் அச்சத்தால் நடுங்கிற்று. மீண்டும் நான் என்னை மறந்தேன். "அழைக்காதே அவ்வாறு வஞ்சகி, குலத்துரோகி—" என்று ஆத்திரத்தில் ஏதேதோ பேசிவிட்டேன். அது மட்டு மல்ல, 'பளீர், பளீ'ரென்று அவளது கன்னத்திலே நான்கு அறைகளும் தந்தேன். அவள் கையிலே இருந்த காப்பி 'டம்ளர்' கீழே விழுந்து உருண்டோடியது. கண்களிலே கண்ணீர் ததும்ப, உள்ளம் துயரால் வெதும்ப, கீழே விழுந்தாள். எனக்கு இரக்கம் பிறக்கவில்லை. மாறாக, கோபம்தான் கொந்தளித்தது. 'சீ கழுதை' என்று கூறிக்கொண்டே வெளியே சென்றேன்."

கயல்விழி சொல்கிறாள் :—

"என்ன இருந்தாலும் என் அண்ணா இப்படி நடந்து கொள்வார் என்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. "நீ செய்த காரியத்திற்கு வேறு எப்படி நடந்து கொள்வதாம்?"—என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் நான் கூறுகிறேன், வேறு யாராவது அப்படி நடந்து கொண்டால் நான் ஆச்சரியப்படப்போவதுமில்லை, ஆயாசப்படப்போவதுமில்லை. என் அண்ணனே இப்படி நடந்து கொண்டாரே என்பதற்காகத்தான் நான் வியக்கிறேன். நீங்கள் என்னைக் குற்றவாளி என்று குறைகூறலாம்; துரோகி என்று தூற்றலாம். வஞ்சகி என்று வசைபாடலாம். இருக்கட்டும், குற்றவாளி என்றே உடன் படுகிறேன்,

ஆனால் ஒன்று, வெளியுலகிற்கு நான் குற்றவாளியாக—வஞ்சகியாக-இருக்கலாம். குறுகிய இதயத்துடன் பார்த்தால் நான் துரோகிதான். கூர்ந்து, இதயத்தை விரித்துச் சிந்தித்துப் பார்த்தால் நான் குற்றவாளியாக உலகின் கண்களுக்குத் தெரியமாட்டேன். ஆம்! நான் அவ்வாறு நடந்து கொண்டதற்குக் காரணம் ஒன்று காதல்; மற்றொன்று என் அண்ணாவேதான்.

அமைதியாக வாழ்ந்த காலத்தில், காதலுணர்வு தோன்றாத காலத்தில், காதலைப்பழித்தேன். காதலுக்காகக் கடமையை மறக்கின்றவர்களையும், அண்ணன் தம்பிகளையும், தாய் தந்தையர்களைத் துறக்கின்றவர்களையும் எள்ளிநகையாடினேன். 'காதல் என்ன அவ்வளவு பெரிதா' —என்று எண்ணினேன். ஆனால் இன்றோ காதலுக்கு நான் அடிமையாவதை அறிகிறேன். அதனால் ஏற்படுகிற உள்ளத் துடிப்பை உணருகிறேன்.

அவர் மூஸ்லீம்தான். வேற்று ஜாதிக்காரர்தான். ஆனாலும் நான் அவரைக் காதலித்தேன். உளமார விரும்பினேன். அவர் என் அண்ணாவைக் காண வருவார். அப்போதெல்லாம் என் அகமும் முகமும் ஒருங்கே மலரும். ஆம்! அவர் ஆதவனானார். நான் தாமரையானேன். அவர்குளிர்மதியானார்-நான் குவளையானேன். இன்றைய சமுதாய அமைப்பிலே நான் அவரைக் காதலிக்கக் கூடாதுதான். அவரும் என்னை விரும்பக் கூடாதுதான். என்ன செய்வது! காதல் சமுதாய வெஞ்சிறையையும் தகர்க்கக் கூடிய சக்தி வாய்ந்ததாயிற்றே! எங்கள் காதல் 'தேய்பிறை'யாகாதென்று எண்ணினோம்; நம்பினோம். அவ்வெண்ணத்திற்குக் காரணம் என் அண்ணாதான்!

ஆம்! அவர் ஒரு எழுத்தாளர். பொழுதுபோக்கு எழுத்தாளரல்ல. முற்போக்கு—மறுமலர்ச்சி--எழுத்தாளர். சமுதாயத்தின் சட்டதிட்டங்களைக் கண்டு அவர் பேனா பயந்ததே கிடையாது. ஏழையின் வெந்த இதயம், எழுத்தாளர்களின் ஏழ்மைவாழ்வு, சர்வாதிகாரத்தின் கேடு, காதலின் பெருமை, கலப்பு மணத்தின் அவசியம், விதவையின் கண்ணீர், முதலியவைகளைப்பற்றிப் பக்கம் பக்கமாக எழுதுவார். அவருடைய கதைகளிலே சீர்திருத்தக் கருத்துக்கள் மிளிரும்; மறுமலர்ச்சி எண்ணங்கள் ஒளிரும். அவருடைய எழுத்துக்களுக்கு நாட்டிலே நல்ல மதிப்பு உண்டாகியது. எழுத்தாளர் வானிலே ஜொலிக்கும் தாரகையாக விளங்கினார், விளங்குகிறார்.

அவருடைய எழுத்துக்களும், பேச்சுக்களும் எங்கள் காதலுக்கு வித்தாயின. நம்பிக்கையை நல்கின. அந்தச் சீர்திருத்தச் சிற்பி எங்கள் காதலையும் ஆதரிப்பார் என்றே எண்ணினோம்; இறும்பூதெய்தினோம். ஆனால் இன்றோ...!

நாட்டிலே சீர்திருத்தச் செம்மலாக விளங்கிய அவர் வீட்டிலே பழமை விரும்பியாகக் காட்சியளித்தார். அன்புடைமையின் அவசியத்தைப்பற்றி, பொறையுடைமையின் பெருமையைப்பற்றி அடிக்கடி என்னிடம் பேசி, அவைகளின் அடிப்படையிலே நீ வாழ வேண்டும் என்று கூறியவரே இன்று அன்பை மறந்தார். ஆருயிர் நண்பன் என்று போற்றிய சலீமை அவமதித்தார். பொறையுடைமையை மறந்தார். என்னை அடித்தார். அதற்காக நான் கலங்கவில்லை. அவருடைய மன மாற்றத்திற்காகவே நான் கலங்குகிறேன்; கண்ணீர்விடுகிறேன்.

கோபத்தைக் கண்டறியாத அந்த அமைதி பொதிந்த முகத்தில் கோபம் கொந்தளிப்பதைக் கண்டேன். ஒருவரை அதட்டிப் பேசி மனத்தை வருத்தாத அவருடைய குரலிலே கொடூரம் குழைந்திருப்பதைக் கண்டேன். அவருடைய வெளி வேஷத்தையும் அப்போது தான் கண்டேன்.

எவருடைய பேச்சும் எழுத்தும் எங்கள் காதலை வளர்த்தனவோ, எவருடைய சீர்திருத்தப் பான்மையும் மறுமலர்ச்சி நோக்கமும் எங்கள் காதலுக்கு நம்பிக்கையை ஊட்டினவோ அவருடைய செய்கையே எங்கள் காதலை முறியடிக்கிறது. ஐயோ! என்ன உலகம்! புகழடைவதற்காக, அறிஞர்தம் ஆசியைப் பெறவேண்டும் என்பதற்காக, வெளியுலகிலே ஒரு பேச்சு, ஒரு எழுத்து. சொந்த வாழ்க்கையிலே உறவினரின் நன்மதிப்பைப் பெற ஒரு விதப் பேச்சு, ஒருவித எழுத்து. நல்லவுலகம்!

(6-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

திராவிடர் வாரஇதழ்

சென்னை 2—2—52 சனிக்கிழமை

பதவிப் பித்தே! பதவிப் பித்தே! உன் பெயர்தானா காங்கிரஸ்?

சென்னை மாகாணத்தில் சென்ற ஐந்தாண்டுக் காலமாக அடக்குமுறை தர்பார் செலுத்திவந்த அலங்கோல ஆட்சியின் மந்திரிகள் மொத்தம் பதினொரு பேர்.

இவர்களிலே ஒருவர்—தோழர் பெருமாள்சாமி ரெட்டியார்—தேர்தலில் நின்றால் நிச்சயம் தோல்வியே தன்னைத் தேடிவரும் என்பதை முன்கூட்டியே தெரிந்துகொண்ட காரணத்தால் தேர்தலுக்கு நிற்கவில்லை.

எனவே தேர்தலில் போட்டியிட்டவர்கள் பத்துப்பேர்.

இந்தப் பத்துப் பேரிலே, தோழர் சீத்தாராம செட்டியார், போட்டியிட்டது, சென்னை சட்டசபைக்கு அல்ல—டில்லி பாராளுமன்றத்திற்கு.

ஆகவே சென்னை சட்டசபைத் தேர்தலுக்கு அபேட்சகர்களாக நிற்க முன்வந்தவர்கள் ஒன்பது மந்திரிகள் தான்.

இந்த ஒன்பது மந்திரிகளிலே, வெற்றி பெற்றவர்கள் மூன்றே மூன்று பேர்தான்

ஏனைய ஆறு அமைச்சர்களும் படுதோல்வி அடைந்திருக்கின்றனர்.

முதலமைச்சர் குமாரசாமி ராஜா,
சட்ட அமைச்சர் மாதவமேனன்,
நிதி அமைச்சர் கோபால ரெட்டியார்,
சுகாதார அமைச்சர் காளா வெங்கட்ராவ்,
மராமத்து அமைச்சர் பக்தவச்சலம்,
ஸ்தல ஸ்தாபன அமைச்சர் சந்திரமவுலி,

ஆகிய அறுவரும் பொது மக்களால் ஓடஓட விரட்டப்பட்டிருக்கின்றனர்.

இவர்கள் ஒவ்வொருவரும் பெற்றிருக்கிற தோல்வி பிரம்மாண்டமானது. என்றென்றும் இவர்களால் மறக்கமுடியாதது.

தோல்வியின் அளவு எவ்வளவு தெரியுமோ? இதோ புள்ளி விவரங்கள் பேசுகின்றன! காதுகொடுத்துக் கேளுங்கள்!

பிரதமர் குமாரசாமி ராஜா பெற்ற ஓட்டுகள் 35,355.

அவரை எதிர்த்து நின்றவர்கள் பெற்ற ஓட்டுகள் 1,37,678.

மாதவமேனன் பெற்ற ஓட்டுகள் 29,549.

அவரை எதிர்த்துநின்றவர்கள் பெற்ற ஓட்டுகள் 69,405.

கோபால ரெட்டி பெற்ற ஓட்டுகள் 15,644.

அவரை எதிர்த்துநின்றவர்கள் பெற்ற ஓட்டுகள் 20,566.

பக்தவச்சலனார் பெற்ற ஓட்டுகள் 17,985.

அவருடைய எதிர்ப்பாளர்கள் பெற்றவை 29,633.

காளா வெங்கட்ராவ்—27,218. அவருடைய எதிர்ப்பாளர்கள்—80,180.

சந்திரமவுலி—19,105. அவருடைய எதிர்ப்பாளர்கள்—37,357.

வெட்கக்கேடான தோல்வி என்று கூறுவார்கள் காங்கிரஸ் தோழர்கள், தோற்றவர்கள் நாமாக இருந்திருந்தால்! ஆனால் நாம், அவ்வளவு கடுமையான சொற்றொடரை வீச விரும்புகின்றோமில்லை! தோல்வியின் அளவு மிக மிக அதிகம்! அதை மட்டும்தான் இங்கே எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறோம்.

இவ்வளவு மகத்தான தோல்வியை அடைந்தும்கூட, இந்த மந்திரிகள் இன்றளவும் தங்கள் பதவிகளை உதறி எறிந்துவிட்டு வெளியேறவில்லை. அட்டைகள் போல் பதவிகளில் ஒட்டிக் கொண்டிருக்கின்றனர்!

இந்த மந்திரிகளும் படுதோல்வி அடைந்துவிட்டனர். இவர்களுடைய கட்சியும் சட்டசபையில் மெஜாரிடி பெறத் தவறிவிட்டது.

என்றாலுங்கூட இந்த மந்திரிகள் இன்னமும் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்ய மறுக்கின்றனர்.

எனவேதான், இவர்களை விரட்டியடித்த மக்கள் மன்றம் வியப்புக் குரலில் கூறுகிறது, "பதவிப்பித்தே—பதவிப்பித்தே—உன் பெயர்தானா காங்கிரஸ்?" என்று!

நியாயம்தானே அது கூறுவது!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
இதோ வெற்றிபெற்றுள்ள வீரர்களின் பட்டியல் :—

பாராளுமன்றம்

திண்டிவனம்
(1) திருக்குறள் முனுசாமி
திண்டிவனம் (ரிசர்வ்ட்)
(2) ஏ. ஜயராம்
காஞ்சீபுரம்
(3) டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி
வந்தவாசி
(4) என். ஆர். முனுசாமி
தர்மபுரி
(5) என். சத்யநாதன்
திருச்சி
(6) டாக்டர் மதுரம்
திருச்செங்கோடு
(7) பேபி (கந்தசாமி)

சட்டசபை

பண்ருட்டி
(8) எஸ் இராதாகிருஷ்ணன் பி.ஏ.
விருத்தாசலம்
(9) என். பரமசிவம் பி.ஏ.
விருத்தாசலம் (ரிசர்வ்ட்)
(10) கட்டிமுத்து
திருக்கோயிலூர்
(11) டி. டி. முத்துக்குமாரசாமி
திருக்கோயிலூர் (ரிசர்வ்ட்)
(12) ஏ. முத்துசாமி
விழுப்புரம்
(13) நாகராஜன் பி.ஏ. பி.எல்.
விக்ரவாண்டி
(14) ஏ. கோவிந்தசாமி
திண்டிவனம்
(15) வேணுகோபால்
திண்டிவனம் (ரிசர்வ்ட்)
(16) ஜகன்னாதன்
செஞ்சி
(17) கே. அரங்கநாதன்
மேலமலையனூர்
(18) கோபாலர் பி.ஏ. பி.எல்.
பழனி
(19) எம்.பி. மங்களக் கவுண்டர்
ஒட்டன்சத்திரம்
(20) எஸ். இலட்சுமிபதி
அரூர்
(21) ஏ. துரைசாமி
ஓமலூர்
(22) பி. இரத்தினசாமி
ஆத்தூர்
(23) எம் பி. சுப்பிரமணியம்
கிருஷ்ணகிரி
(24) டி. கிருஷ்ணமூர்த்தி
மாயவரம்
(25) கே ஆர். சம்பந்தம் பி.ஏ.
மாயவரம் (ரிசர்வ்ட்)
(26) ஏ. வேலு
அரக்கோணம்
(27) பி. பக்தவச்சலம்
திருப்பத்தூர்
(28) இ.எல். இராகவன் பி.ஏ. பி.எல்.
ஆரணி
(29) வி. கே. கண்ணன்
வந்தவாசி
(30) எஸ். சோம சுந்தரம்
வந்தவாசி (ரிசர்வ்ட்)
(31) தசரதன்
வாணியம்பாடி
(32) ஏ. கே. அனுமந்தராயர்
செய்யாறு
(33) தருமலிங்கம்
போளூர்
(34) எம். ஏ. மாணிக்கவேல்
ஸ்ரீபெரும்பூதூர்
(35) டி. சண்முகம்
முசிறி
(36) தங்கவேலு பி. ஏ. பி. எல்
காஞ்சீபுரம்
(37) எஸ்.தெய்வசிகாமணி பி ஏ. பில்.
கடலூர்
(38) எஸ். எஸ். இராமசாமி
கடலூர் (ரிசர்வ்ட்)
(39) ஏ. இரத்தினம்
அரவக்குறிச்சி
(40) என் இரத்தினம்
லால்குடி
(41) ராஜா சிதம்பரம்
செங்கற்பட்டு
(42) கே. விநாயகம்
துறையூர்
(43) ப. அரங்கசாமி
ஸ்ரீரங்கம்
(44) சிற்றம்பலம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சலீம் கூறுகிறான் :—

"நான் சொல்வதுபோல் செய். ஆனால் நான் செய்வதுபோல் செய்யாதே!" என்று யாரோ ஒரு மேலை நாட்டுப் பெரியார் கூறியதை எந்தப் புத்தகத்திலோ படித்த ஞாபகம். அதைத் தான் என் நண்பனுடைய செய்கை இப்போது எனக்கு நினைவூட்டுகிறது. ஊருக்கெல்லாம் சீர்திருத்தம் பேசினான். காதலின் தன்மை, கலப்பு மணத்தின் அவசியம், விதவையின் வாழ்வு என்பவைகளைப்பற்றி இடிமுழக்கம் செய்தான். ஆனால் அவைகளுக்குத் தன் வாழ்வில், தன் வீட்டில் இடந்தர மறுக்கிறான். ஊரார் காதலைப்பற்றிப் பக்கம் பக்கமாக தீட்டிய அவன், காதலர்களின் இதயத் துடிப்பைக் கல்நெஞ்சனும் கனிந்துருகுமாறு தன் எழுத்திலே காட்டிய அவன், தன் தங்கையின் காதலை உணர மறுக்கிறான். அவளது இதய கீதத்தைக் கேட்க மறுக்கிறான்.

நான் அவளைக் காதலித்தேன். தோன்றி மறையும் இன்பத்திற்காக அல்ல. ஓய்வு நேர உல்லாசத்திற்காகவுமல்ல. என் இன்ப வாழ்க்கையின் உறுதுணையாகத்தான் அவளை நினைத்தேன். திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்ற எண்ணத்துடன்தான் காதலித்தேன். நான் காதலை விலை கூறவில்லை. அவளும் விலை கூறவில்லை. அதை நண்பனிடம் தெரியப்படுத்தவும் விரும்பினேன். சமயம் வரும்போது கூறலாம் என்றுதான் இவ்வளவு நாளாகப் பேசாமல் இருந்தேன். ஆனால் இப்போது விஷயம் விபரீதமாகிவிட்டது. அவனே அறிந்து கொள்ளும்படியான சந்தர்ப்பமும் ஏற்பட்டுவிட்டது.

பாண்டியன், என் நண்பன், எங்கள் காதலை உணர்ந்தான். எங்கள் தொடர்பைக் கண்டான். நான் நினைத்தேன் அப்போது, எங்களை அவன் ஆசீர்வதிப்பான் என்று. அவனோ அவமதித்தான்; துரோகி எனத் தூற்றினான்; அக்கிரமக்காரனென்றான். அவன் நன்றாகத் தூற்றட்டும்! அதற்காக நான் கலங்கவில்லை, தூற்றுவதற்கு உரிமையுள்ள நண்பன்தானே தூற்றுகிறான்; போகட்டும்.

நானும் இப்பொழுதுதான் உலகை உணருகிறேன். சீர்திருத்தம் பேசுவார்கள் சிலர். ஆனால் அவர்களின் சொல்லும் செயலும் இரு துருவங்களாகத்தான் இருக்கும். என் இதயம் எதை எதையோ எண்ணுகிறது. நான் ஏன் அவனை நிந்திக்கவேண்டும்? நான் செய்த காரியம் தவறுதான். சாதியால் நாங்கள் இருவரும் வேறுதானே! பொருளாதாரத்தில் கூட அவன் செல்வந்தன் மகன். நான் வெற்றிலை விற்பவன் மகன் தானே! தவறுதான்; நான் கயல்விழியைக் காதலித்தது தவறுதான். பணக்காரன் தொடர்பு மட்டுமல்ல உறவுகூட ஏழைகளுக்குக் கூடாததுதான். நான் அவளை மறந்துவிடுகிறேன். ஆனால் அவள்? நான் என்ன செய்வது! நான் பிரிவதால் அவளுக்கு ஒன்றும் ஆபத்து இல்லை. ஏனெனில் நான் அந்த அளவுக்கு அவளை நெருங்கியது கிடையாது. மலரின் அழகைக் கண்டுதான் காதல் கொண்டேன். மலரைப் பறிக்கவில்லை. நுகரவுமில்லை: அதுகுறித்துதான் நான் இப்போது மகிழ்ச்சியடைகிறேன்.

ஆனால் அவளை மறப்பது கடினம்தான். நான் என்ன செய்வது! காதல்புரியலாம், கலப்பு மணம் செய்துகொள்ளலாம், அப்போதுதான் சமூகம் முன்னேறும் என்று அறிவுரை கூறிய பாண்டியனே தவறு என்று கூறும்போது நான் என்ன செய்வது!

எனவேதான் இந்த முடிவிற்கு வந்தேன். அவளாவது நல்ல முறையில் வாழட்டும். அவன் வீணாக தன் குலப்பெருமையை என்னால் கெடுக்கவேண்டாம். பாண்டியனும் கௌரவமாக வாழட்டும். ஆனால் ஒன்றுமட்டும் தெரிந்துகொண்டேன், ஊருக்கு உபதேசம் செய்பவர்களின் சொந்த வாழ்வு விசித்திரமானதாக இருக்கும் என்பதைத்தான் கூறுகிறேன்.

பாண்டியன் கூறுகிறான்:—

படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தேன். ஏனோ அந்த உறக்கம் என்னை அரவணைக்க மறுத்துவிட்டது. உள்ளத்திலே கவலை இருக்கும்பொழுது உறக்கம் எப்படி வரும்?

மாலையில் நடந்த அந்தச் சம்பவம் என் உள்ளத்திரையிலே சலனப் படமெனத் தோன்றி மூளையைக் குழப்பிக்கொண்டிருந்தது; என் இதயம் தவித்தது. என்னால் படுத்திருக்கவே முடியவில்லை. மெதுவாக எழுந்து சென்று விளக்கைப் போட்டேன். அந்த மூலையிலே பாய்கூட இல்லாமல் தரையில் கையையே தலையணையாகக் கொண்டு படுத்திருந்தாள் கயல்விழி. அந்த இளமை கொழிக்கும் வதனத்திலே மகிழ்ச்சி குடிகொண்டிருக்கவில்லை; சோக ரேகை படர்ந்திருந்தது. அழுது அழுது கன்னங்கள் வீங்கியிருந்தன. ஆத்திரத்திலே அறிவை இழந்து அடித்துவிட்டேன்.

பேசாமல் சாய்வு நாற்காலியில் வந்தமர்ந்தேன். 'மியா, மியா' வென்று பூனை ஒன்று சப்தமிட்டது. தலை நிமிர்ந்து பார்த்தேன். எதிரே, சுவற்றிலே என் அன்னையின் புகைப்படம் மாட்டியிருந்தது. புன்னகை தவழும் அன்னையின் வதனத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். "பாண்டியா! கயல்விழி, அறியாப்பெண்; உன்னைத்தவிர அவளுக்கு ஆதரவு யார் இருக்கிறார்கள்? அடித்தாலும் நீதான், அணைத்தாலும் நீதான். கடைசிவரையில் அவள் கண்கலங்காமல் பார்த்துக்கொள். நம் குலக்கொடி தழைக்க வேண்டும். அவளுக்குப் பொருத்தமான, அவளுக்குப் பிரியமான பையனைப் பார்த்துத் திருமணம் செய்துகொடு, நல்ல முறையில். அதுவே என் கடைசி ஆசை." என்று வாழ்வுக்கும் சாவுக்கும் இடையிலே ஊசலாடிக்கொண்டு மரணகீதம் பாடிக்கொண்டிருந்த இறுதி நேரத்தில் என் அன்னை என்னிடத்தில் கயல்விழியை ஒப்படைத்துவிட்டு மறைந்த காட்சி என் மனக்கண் முன்னே தோன்றியது. அந்தக் குரல் இன்று என் அறிவற்ற போக்கை இடித்துரைப்பதுபோலிருந்தது.

என் இதயம் அமைதியைத் தேடி அலைந்தது. திரும்பவும் விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கையில் படுத்தேன். உறக்கம் கண்ணைக் கவ்வியது. 'சலீமுடன் கயல்விழி எங்கோ ஓடிப்போய் விட்டாள். நான் ஊரிலுள்ள குளம் குட்டை கேணிகளிலெல்லாம் தேடுகிறேன். ஊரார் கிண்டல் பாணம் தொடுக்கின்றனர். ஏசல் அம்பு விடுகின்றனர். நான் கலங்குகிறேன்; கண்

ணீர் விடுகின்றேன்'—இப்படியாக ஒரு கனவு! நான் மீண்டும் விழித்தெழுந்தேன்.

"அவள் அவனுடன் ஓடிப்போய் விட்டால் என்ன செய்வாய்?" இந்தக் கேள்வி எங்கிருந்தோ வந்து என் உள்ளத்தை உடைத்தது. லேசாக தலைவலி உண்டாகியது. மீண்டும் எழுந்து விளக்கைப் போட்டேன். உலகில் கவலையை மறக்கச் செய்யும் ஆற்றல், மது, மங்கை, இசை, நாட்டியம், நூல்கள் முதலியவைகளுக்கு உண்டு என்று படித்திருக்கிறேன். ஆகையால் என் கவலையை மறைக்கப் புத்தக உலகில் புகலாம் என்றெண்ணிக் கொண்டு மேசையருகில் சென்றேன். அந்தப் புத்தகம் மேலே கிடந்தது. 'காதல் இதயம்' என்பது அதன் பெயர். நான் எழுதிய நூல்தான் அது. அண்மையில் வெளிவந்தது. பொங்கல் திருநாளன்று நான் கயல் விழிக்கு அதைப் பரிசாக அளித்தேன். அந்த நூலைப் புரட்டினேன். தமிழ் நாட்டின் பிரபல எழுத்தாளர் 'புதுமை விரும்பி' மதிப்புரை வழங்கி இருந்தார். ஆம்! அவரிடம் நான் நேரில் வாங்கிய மதிப்புரைதான் அது. "இந்த நூலின் ஆசிரியர் பாண்டியன் ஒரு சீர்திருத்தச் செம்மல். இவருடைய கதைகள் செல்லரித்த சமுதாயத்தைச் செப்பனிட மிக மிகப் பயன்படும்......' மதிப்புரை இவ்வாறு ஆரம்பமாகி இருந்தது.

அந்த வார்த்தைகளுக்கிடையே எழுத்தாளர் 'புதுமை விரும்பி'யின் உருவம் தெரிவதுபோல் இருந்தது எனக்கு. 'அவசரப்பட்டு, சொல் வேறு செயல் வேறு என்ற கொள்கையைக் கடைபிடிப்பவர்களுக்கு மதிப்புரை தந்தேனே!' என்று கூறி அழுவதுபோல் இருந்தது. நன்றாகக் கண்களைத் துடைத்துக் கொண்டு மீண்டும் அவவரிகளைப் பார்த்தேன். அங்கே வார்த்தைகள்தான் தென்பட்டன. புத்தகத்தைப் புரட்டினேன். நடுநடுவே சில வரிகள் எழுதுகோலால் கோடு கிழித்து வைக்கப்பட்டிருந்தன. அப்படிச் செய்தது கயல்விழிதான் போலும்! அவைகளில் ஒன்றைப் படித்தேன். "காட்டாற்றைக்கூட தடுத்து நிறுத்திவிடலாம். ஆனால் இந்தக் காதல் ஊற்றை மட்டும் நிறுத்துவது எளிதல்ல"—என்றிருந்தது. மறுபக்கம் புரட்டினேன். உயிர்க்கொலை வேண்டுமானாலும் செய்துவிடலாம்; இந்தக் காதல் கொலை செய்வது மகா பாபம்!" என்றிருந்தது. அந்த வாக்கியங்கள் என்னைப் பார்த்து எள்ளி நகையாடுவது போலிருந்தன. நான் எழுதிய எழுத்துக்கள்தாம் அவைகள். எழுத்திற்கும் எனது நடத்தைக்கும், எவ்வளவு பேதம்! நானே வெட்கினேன். அமைதியைத் தேடி புத்தகத்தைப் புரட்டினால் அங்கு பேரிடி.!

திரும்பவும் படுக்கையில் வந்து படுத்தேன். 'கயல் விழியை சலீமுக்குத் திருமணம் செய்து கொடுத்தால்தான் என்ன?' எங்கிருந்தோ திடீரென்று ஓடிவந்து குதித்தது இந்தக் கேள்வி. அவளுடைய இன்பத்தை நாம் ஏன் கெடுக்க வேண்டும், அவள் எப்படியாவது மகிழ்ச்சியாக இருந்தால் போதும் என்றது எனது உள்ளம். என் இதயத்திற்கும் சிந்தனைக்கும், பழமைக்கும் புதுமைக்கும், மடமைக்கும் மறுமலர்ச்சிக்கும் உண்டாகிய நீண்டதொரு போராட்டத்திற்குப் பிறகு நான் உள்ளுணர்வு பெற்றேன். என் இதயத்தடாகத்திலே படர்ந்திருந்த பழமைப் பாசி விலகிற்று. அவள் வாழ்வே என் வாழ்வு என்று எண்ணியிருந்த நானா, ஊருக்கெல்லாம் உபதேசம் செய்த நானா, இவ்வாறு நடந்து கொண்டேன் என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன்; வருந்தினேன்; அழுதேன். உறக்கம் என்னை அணைத்தது.

காலை மலர்ந்தது, கயல் விழியின் வாழ்வும் இனி மலரும் என்ற எண்ணத்துடன் படுக்கையை விட்டெழுந்தேன். "அண்ணா, வெந்நீர் போட்டிருக்கிறேன்." என்று கூறிக்கொண்டே பற்பொடியை வைத்துவிட்டுச் சென்றாள் கயல் விழி. அவளுக்குத்தான் என்மேல் எத்தனை அன்பு! என்ன இருந்தாலும் அண்ணன்தானே என்று எண்ணி நடந்ததை மறந்தாள் போலும். மீண்டும் என் அறிவழிந்த போக்கை எண்ணி நானே வருந்தினேன். பிறகு குளித்துவிட்டு உணவு உண்ணச் சென்றேன். உணவு உண்ணும் பொழுதே எனக்கு அவளுடன் ஏதாவது ஆறுதலாகப் பேசவேண்டும் போலிருந்தது. மெதுவாக "கயல் விழி" என்றேன். "அண்ணா" என்றாள். நான் அவளை நிமிர்ந்து நோக்கினேன். அந்தக் கயல்விழிகளில் கண்ணீர் ததும்பிக் கொண்டிருந்தது. என்னால் அதற்கு மேல் ஒன்றும் பேசமுடியவில்லை; வார்த்தைகள் வெளிவர மறுத்தன. என் கண்களும் கண்ணீரை மல்கின. அதை அவள் எங்கே பார்த்து விடுவாளோ என்றெண்ணி அறையைவிட்டு வெளிவந்து துடைத்துக் கொண்டு வெளியேறினேன்.

நண்பன் சலீமின் வீடு நோக்கி நடந்தேன். அவன் வீடு நெருங்க நெருங்க என் நடையின் வேகமும் குறைந்தது. "துரோகி", "நன்றி கெட்டவன்". என்று தூற்றினோமே என்று எண்ணும் பொழுது என் உள்ளம் என்னை என்னவோ செய்தது. பேசாமல் திரும்பிவிடலாமா என்று எண்ணினேன். ஆனால் நெடுநாட்களாக உரிமையுடன் பழகிய நண்பன் அதை ஒன்றும் பெரிதாக எடுத்துக் கொள்ள மாட்டான் என்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு சலீமின் வீட்டின் உள்ளே நுழைந்தேன்.

கவலையின் சின்னமாக, சோகமே உருவெடுத்தாற்போல, சலீம் கன்னத்தில் கையைவைத்துக்கொண்டு திண்ணையில் உட்கார்ந்திருந்தான். அவனை அந்த நிலையில் காண எனக்கும் பரிதாபமாக இருந்தது.

"சலீம்" என்றேன் மெதுவாக. நண்பன் திடுக்கிட்டுத் திரும்பினான். என்னைக் கண்டவுடன் "வா பாண்டியா" என்று கூறிய வண்ணம் தலைகுனிந்தான்.

"சலீம், வருத்தப்படாதே! வீட்டிற்குப் போகலாம் வா" என்றேன்.

"பாண்டியா!" என்றான் அவன். குரலிலே கேள்விக்குறி தேங்கி நின்றது.

"சலீம்! நடந்ததை மறந்துவிடு. வீட்டிற்கு வந்து கயல் விழிக்கு ஆறுதல் மொழி கூறு. அவள் இனி உனக்கே உரிமையானவள். நண்பா! ஆத்திரத்தில் அறிவிழந்து பேசிவிட்டேன். இலட்சியத்திருந்து தவறப் பார்த்தேன். நீங்கள் இருவரும் என்னை 'மன்னித்து விட்டேன் என்று கூறுங்கள். அப்போதுதான் என் மனம் நிம்மதியடையும், வா சீக்கிரம்" என்றேன் நான்.

துன்ப இருள் கவிந்திருந்த அவனுடைய வதனத்தில் இன்ப ஒளி வீசியது. "பாண்டியா, உண்மைதானா?" என்றான் ஆச்சரியத்துடன். "உண்மை, உண்மை, என் கொள்கைமேல் ஆணை. எழுந்திரு!" என்றேன். முகத்திலே புன்னகையுடன், கண்களிலே ஒரு புத்தொளியுடன் எழுந்து வந்தான் சலீம்.

சடசடெனச் சரிந்து வீழ்கிறது சென்னை மாகாண காங்கிரஸ்!

வட்டாரந்தோறும் காங்கிரஸ் பட்டாளத்திற்குத் தோல்வி!

வீரமுழக்கம், அன்று! வேதனைக்கீதம், இன்று!

ஆதரவாளர் தொகை 68 லட்சம் தான்! எதிர்ப்பாளர் தொகையோ 105 லட்சம்!

மக்கள் மன்றத்தின் மகத்தான தீர்ப்பு.

"தேசமே காங்கிரஸ்! காங்கிரசே தேசம்! எங்கள் காங்கிரசை வீழ்த்துவதா? அது யாராலும் ஆகாத காரியம்!"

"எழுபதாண்டுக் காலமாக ஓங்கி வளர்ந்திருக்கும் உன்னத ஸ்தாபனம் காங்கிரஸ்! அந்த மகத்தான காங்கிரசையா நேற்றுமுளைத்த கட்சிகள் ஒழித்து விடப் போகின்றன? வெறும் பிரமை! வீண் கனவு!"

"பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் பீரங்கித் தாக்குதல்களாலேயே தகர்க்கமுடியாத காங்கிரசையா இந்தத் தி மு, க. சிறுவர்களின் சொற்போர்க் குண்டுகள் தோற்கடித்துவிடப் போகின்றன! செ! செ! அது நடக்காது!"

"லோகமான்ய திலகரால் உருவாக்கப்பட்ட காங்கிரஸ்! லாலா லஜபதியால் ஆதரிக்கப்பட்ட காங்கிரஸ்! தாதாபாய்நவுரோஜியால்போற்றிவளர்க்கப்பட்ட காங்கிரஸ்! அந்தக் காங்கிரசைத்தோற்கடிக்க இந்தச் சுண்டைக்காய்களின் முன்னணியா? இதுகளின் முயற்சி ஒருபோதும் பலிக்காது!"

"ஆயிரமாயிரம் ஆபத்துக்கள் அடுக்கடுக்காக வந்தாலும் சரியே,அவைகளால் எல்லாம் எங்கள் காங்கிரஸ், தோற்காது, துவளாது."

"சிங்கத்தை வீழ்த்த சுண்டெலிகளா? யானையை ஒழிக்க இந்தப்பூனைகளா? வேங்கையைத்தோற்கடிக்க விட்டில் பூச்சிகளின் பட்டாளமா? சிறுத்தையை அடக்க சிறு முயல்களின் கூட்டணியா? பரிதாபத்திற்குரிய காட்சி! பார்த்தவர் நகைக்கக் கூடிய முயற்சி!"

"திராவிட முன்னேற்றக் கழகமா? கம்யூனிஸ்ட் கட்சியா? சோஷலிஸ்ட் ஸ்தாபனமா? கிஸான் மஸ்தூர் பிரஜா இயக்கமா? எங்கள் காங்கிரசைத் தோற்கடிக்க ஒருவராலும் முடியாது!";

"ஆறு அவுன்ஸ் அரிசிதான் கொடுத்திருக்கிறோம்! மூன்று கெஜம் துணிதான் அளித்திருக்கிறோம், தடியடி தர்பாரைத்தான் நடத்தியிருக்கிறோம்! பேச்சுரிமை எழுத்துரிமைகளை ஒழிக்கத்தான் முயன்றிருக்கிறோம்! பசி—பட்டினி—பஞ்சத்தைத்தான் பொதுமக்களுக்குப் பரிசாகத் தந்திருக்கிறோம்! என்றாலும் பொதுமக்கள் எங்களைத்தான் தேர்ந்தெடுப்பார்கள்—ஏனெனில் நாங்கள்தான் நாட்டிற்கு "சுயராஜ்யம்" வாங்கித் தந்தவர்கள்!"

"எந்தக் கோபுரத்தின் மீது வேண்டுமானாலும் ஏறி நின்று, எவ்வளவு உரத்த குரலில் வேண்டுமானாலும் கூறத் தயாராக இருக்கிறோம்—ஆட்சிப் பீடத்தை விட்டு எங்களை யாராலும் அசைக்க முடியாது! அசைத்த முடியாது!"

ஆம்! பொதுத் தேர்தலின் முடிவுகள் அறிக்கப்படுவதற்கு முன்னாள் வரையிலே இப்படித்தான் பேசிக்கொண்டிருந்தனர் தேசியத் திருவாளர்களெல்லாம்! பேசிக்கொண்டிருந்தனரா? இல்லை! வீரமுழக்கமிட்டுக்கொண்டிருந்தனர்!

ஆனால் இன்றோ?

கைகளைப் பிசைந்து கொள்கின்றனர்! தலைகளைக் குனிந்து கொள்கின்றனர்! கண்ணீரைச் சிந்திக் கதறுகின்றனர்! ஐயகோ போயிற்றே என்று அவலக் குரல் எழுப்புகின்றனர்!

தினம் தினம், தோல்விச் செய்திகள், புற்றிலிருந்து வெளிவரும் ஈசல்கள் போல, அடுக்கடுக்காக வெளிவந்து அவர்கள் செவிகளைத் துளைக்கின்றன!

காஞ்சிபுரத்தில் தோல்வி! திண்டிவனத்தில்தோல்வி! வாணியம்பாடியில் தோல்வி! மன்னார்குடியிலும் தோல்வி என்ற விதத்திலே, ஒவ்வொரு வட்டாரத்திலிருந்தும் தோல்விக்கணைகள் புறப்பட்டு வந்தபடி இருக்கின்றன.

தமிழ் நாடா, ஆந்திரமா, மலையாளமா, திருவாங்கூர்—கொச்சியா, ஐதராபாத்தா,—தென்னாட்டின் ஒவ்வொரு பகுதியும் தோல்விப் படலத்தைத்தான் காங்கிரஸ் தோழர்களுக்கு அன்புப் பரிசாக அளித்தபடி இருக்கின்றன.

அமைச்சர் கோபால ரெட்டியார் தோற்றார் என்றோர் 'சேதி' வருகிறது—காங்கிரஸ்வாதிகளின் கண்களெல்லாம் கலங்குகின்றன—அவர்கள் கன்னங்கள் நீரோடைகளாக மாறிவிடுகின்றன—அந்தக் கண்ணீர் உலர்வதற்குள்ளாக காளா வெங்கட்ராவும் தோற்றார், மந்திரி மாதவனும் தோற்றார், அமைச்சர் பக்தவத்சலத்திற்கும் அதே கதி என்று சோகச் செய்திகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து வெளிவந்து அவர்கள் உள்ளத்தை வேதனை வெள்ளத்தால் நிரப்பிவிடுகின்றன.

ஒவ்வொரு நாளும் அவர்கள் நாள் இதழ்களைப் பிரித்துப் பார்க்கிறபோது, "காங்கிரசுக்குத் தோல்வி-தோல்வி" என்று உள்ள சோக கீதத்தைத்தான் அந்த ஏடுகள் இசைத்திடக் காண்கிறார்களே தவிர, வெற்றி வெற்றி என்ற இன்ப நாதத்தை அவர்களால் கேட்க முடியவில்லை.

உண்மையிலேயே சென்னை மாகாண காங்கிரஸ்வாதி ஒவ்வொருவரும் இதுபோது ஒவ்வொரு சோக சித்திரமாகவே காட்சி தருகின்றனர்!

அவர்களுடைய இன்றைய நிலைமையைச் சித்தரித்துச் சென்னையிலிருந்து வெளிவருகிற நாளிதழ் ஒன்று எழில்படத் தீட்டியுள்ள எழுத்தோவியம் ஒன்றினை இதோ பாருங்கள்:—

"காந்திஜி, தம் மார்பில் போட்டு வளர்த்த காங்கிரஸ், இப்போது கண்கலங்கி நிற்கிறது... தேம்பி அழுது நிற்கும் அனாதைச் சிறுமிபோல் கதறி நிற்கிறது.........காங்கிரஸ் ஊழியர்கள் இடிப்பொடிந்து கிடக்கிறார்கள். அந்த ஊழியர்கள் நெஞ்சிலே கூரிய வேல் ஆழப்பதிந்து கிடக்கிறது. நாளை எந்த முகத்தோடு (பொது மக்கள் முன்) போவது என்ற துயரத்தில் ஆழ்ந்து கிடக்கிறார்கள். காங்கிரஸ் ஊழியர் வட்டாரத்தில் கவிந்து கிடக்கும் சோகப் படலம் பயங்கரமாக இருக்கிறது......ஒன்றிரண்டு வோட்டுகளில் காங்கிரஸ்காரர்கள் தோற்றார்களென்று கூட சொல்லுவதற்கில்லை. சில இடங்களில் லட்சம் வோட்டு வித்தியாசம் இருக்கிறது. தேசபக்தர்கள் இந்த வித்தியாசத்தைக் கண்டு தலை குனிவார்கள். இத்தகைய தோல்வியைப் போல வேறு எங்கும் நடந்ததில்லையே என்று வருத்தப்படுவார்கள்."

எந்த ஏட்டிலே வெளிவந்திருக்கின்றன தெரியுமோ இந்த வாசகங்கள்? எந்த ஏடு, எதிர்க்கட்சித் தோழர்களையெல்லாம் நாக்கில் நரம்பின்றித் தூற்றித் தூற்றி ஒரு புது அகராதியை உண்டாக்கியிருக்கின்றதோ, எந்த ஏடு, தன்னுடைய அபாரமான சேவையாலும் அற்புதமான பணியினாலும்தான் காங்கிரஸ் கோட்டை சரியாமல் இருந்து வருகிறது என்று மனப்பால் குடித்துக்கொண்டிருந்ததோ, எந்த ஏடு, சென்னை மாகாண காங்கிரஸ் சர்க்காரே தன்னுடைய ஆபீஸ் தாழ்வாரத்துக்குள்ளேதான் அடங்கிக் கிடக்கிறது என்று எண்ணி எண்ணி இறுமாந்து கிடந்ததோ, எந்த ஏடு, சென்னை அமைச்சர்களெல்லாம் தன்னுடைய ஆசிரியர்சாரின் சட்டைப் பைக்குள்ளே அடக்கம் என்று இரகசியமான மொழியில் பலரிடம் சொல்லிச் சொல்லிப் பூரிப்படைந்து வந்ததோ, அதே ஏட்டிலே, சென்னை சர்க்காரின் கெஜட் என்று சொல்லப்பட்டு வந்த அதே இதழிலே, ஆம், "தினசரி" என்னும் தாளிலேதா வெளிவந்திருக்கிறது இந்த சோக கீதம்.

"தேம்பி அழுது நிற்கும் அனாதைச் சிறுமிபோல் கதறிநிற்கிறது காங்கிரஸ்" என்று கண்களிலே நீர் வடிய வடியக் கூறுகிறது "தினசரி."

இல்லை—கிடையாது—என்று யாரும் கூறமுடியாது. யாரும் என்றால் தமிழ் நாட்டு ராஷ்ட்ரபதி என்று, இன்று, தலைகுனிந்து நிற்கும் "தேசபக்தர்"களால் சித்தரிக்கப்படுகிற ஸ்ரீலஸ்ரீ காமராஜர் இருக்கிறாரே, அவரையும் சேர்த்துத்தான் கூறுகிறோம், நிச்சயமாகக் கூறமுடியாது.

ஏனெனில், காங்கிரஸ் கட்சி இதுபோது பெற்றிருக்கிற தோல்வி அவ்வளவு மகத்தானது! எவ்வளவு மகத்தான தலைவர்களையும் மனம் கலங்கச் செய்யக் கூடியது.

சென்னை மாகாண சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 375.

இதிலே, இந்தக் கட்டுரை தீட்டப்படுகிற இந்தநேரம் வரையிலே (செவ்வாய் காலை) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை 328.

இந்த 328 பேரில் காங்கிரஸ் வாதிகளின் தொகை, கவனமாகப் படியுங்கள், 138. ஆனால் காங்கிரஸ் அல்லாத ஏனைய கட்சித் தோழர்களின் தொகை 190.

ஆமாம் நண்பர்களே, காங்கிரஸ் பெற்றுள்ள இடங்கள் 138.

எதிர்க் கட்சிகள் பெற்றுள்ள இடங்கள் 190.

138—190.

காங்கிரஸ் கட்சி, கண்கலங்கி நிற்க வேண்டிய அளவு பரிதாபத்தோல்வி பெற்றிருக்கிறது என்பதை விளக்க இதைவிட வேறென்ன ஆதாரம் தேவை?

சட்டசபையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 375.

இதிலே, பாதி அளவு, அதாவது, 188 ஸ்தானங்களை எந்தக் கட்சி பெறுகிறதோ அந்தக் கட்சிதான் மெஜாரிடி பெற்றிருக்கிறது என்று சொல்லப்படுகிற தகுதியைப் பெறக்கூடியதாகும்.

அந்தக் கட்சிதான் நாட்டாட்சிப் பீடத்திலே பெருமையுடன் அமரக்கூடிய உரிமை பெற்றதுமாகும்.

ஆனால் காங்கிரஸ் பெற்றிருப்பதோ 138 ஸ்தானங்கள்தான். அதே நேரத்தில் எதிர்க் கட்சிகள் பெற்றிருப்பதோ 190 ஸ்தானங்கள்.

ஆகவே, மெஜாரிடி, காங்கிரசுக்கு இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

மெஜாரிடி இல்லாத காரணத்தால், காங்கிரஸ் இந்த முறை, மந்திரிசபை அமைக்க முடியாது என்பதும் நன்றாக விளங்குகிறது.

உல்லாச பவனி முடிகிறது! அடக்குமுறை ஆட்சி தொலைகிறது!

மார்ச் மாதம் 31 ஆம் தேதிக்குப் பிறகு, காங்கிரஸ், இந்த மாகாணத்தில், 'ஆளும் கட்சி'யாக இருக்கமுடியாது. 'ஆண்ட கட்சி'யாகத்தான் இருக்கமுடியும்.

இப்போது "கனம் மந்திரி"களாக இருப்பவர்களும் அந்தத் தேதிக்குப் பிறகு, மாஜி மந்திரி என்ற பட்டத்தைத்தான் சுமந்து செல்ல முடியும். அதிகார பீடம், அந்தத் தேதிக்குப் பிறகு, அவர்களிடம் இருக்க முடியாது.

மார்ச் 31க்குப் பிறகு, அவர்களால்,

நாங்கள் தானையா இந்த மாகாணத்தை ஆள்பவர்கள் என்று பெருமையுடன் பேசி, பூரிப்புடன் உலவ முடியாது,

மாத ஊதியம் 1500ம், அலவன்ஸ் தொகை 1500-ம் பெற்று ராஜபோக வாழ்விலே, உல்லாச பவனி வர முடியாது.

ஊருக்கு ஊர் 144ஐ வீசிக்கொண்டு, மாதத்திற்கு மாதம் துப்பாக்கிப் பிரயோகம் நடத்திக் கொண்டு வாரத்திற்கொருமுறை மக்களைத் தடியடி தர்பாருக்கு உள்ளாக்கிக் கொண்டிருக்க முடியாது.

அதிகாரிகளை மிரட்டிக் கொண்டு, தன் கட்சிக்கொரு நீதி பிற கட்சிக்கொரு நீதி வழங்கிக்கொண்டு, சொந்தக் கட்சியினர் செய்யும் அக்ரமங்களுக்கெல்லாம் ததாஸ்து கூறிக்கொண்டிருக்க முடியாது,

ஆறவுன்ஸ் அரிசியை அளந்து வழங்கிவிட்டு, ஆகுமா இந்தப் போக்கு என்று பணிவுடன் கேட்கும் பொது மக்களிற் பலரை, வேண்டுமென்றே சிறையில் அடைத்து, விரும்பிய அளவு கொடுமைப் படுத்தும் கோரமையைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்க முடியாது.

மார்ச் 31...ஆம்! அதுதான் சென்ஊ மாகாண காங்கிரஸ் மந்திரிசபையின் கடைசிநாள்! அவர்களுடைய அடக்குமுறை தர்பாரின் முடிவுநாள்!

பரிதாபம்! பரிதாபம்! அந்தத் தேதிக்குப் பிறகு, காங்கிரஸ் மந்திரிகள், "மாஜி"களாகிவிடுவார்கள்! ஏதோ ஒரு காலத்தில் நானும் ஒரு மந்திரியாக இருந்தேன் என்று சொல்லிச் சொல்லிப் புலம்பவேண்டிய சோக கட்டத்தில் உலவிடுவார்கள்!

நாம் முன்னரே குறிப்பிட்டிருப்பதுபோல, காங்கிரஸ் கட்சியினர், இந்த மாகாணத்தில், இதுவரை தோற்றுள்ள தொகுதிகள் 190.

இவற்றிலே, ஒவ்வொரு தொகுதியிலேயும் அவர்கள் பெற்றுள்ள தோல்வி சாமான்யமானதல்ல.

சரிதான் போ என்று சொல்லி ஒதுக்கக் கூடியதல்ல.

சொற்ப ஓட்டுகள் வித்தியாசம்தானே என்று இலேசாகச் சொல்லி புன்னகையுடன் அலட்சியப்படுத்தக் கூடியதுமல்ல.

அட! இது ஒரு தோல்வியாகுமா? என்று நாக்கை வளைத்துக் குழைவுடன் பேசிப் பூசி மெழுகிடக் கூடிய தோல்வியுமல்ல.

தோல்விகள் ஒவ்வொன்றும் மகத்தானது. "தினசரி" ஏட்டாரின் திருவாய் மொழிப்படிப் பகர்வதானால், "தேசபக்தர்களை" யெல்லாம் தலைகுனியச் செய்யக் கூடியது.

ஹோசூர் (சேலம்)

காங்கிரஸ் பெற்ற ஓட்டுகள்	13,863
காங்கிரசல்லாதார் பெற்ற ஓட்டுகள்	19 256

செய்யாறு (வ.ஆ.)

காங்கிரஸ்	19,709
காங்கிரசல்லாதார்	25,586

செஞ்சி

காங்கிரஸ்	14,837
அல்லாதார்	21,505

ஆரணி

காங்கிரஸ்	10,329
அல்லாதார்	26,568

கிருஷ்ணகிரி

காங்கிரஸ்	12,820
அல்லாதார்	22,655

வாணியம்பாடி

காங்கிரஸ்	12,511
அல்லாதார்	32,788

பண்ருட்டி

காங்கிரஸ்	18,428
அல்லாதார்	33,921

செங்கம்

காங்கிரஸ்	7,996
அல்லாதார்	27,600

மதுரை வடக்கு

காங்கிரஸ்	13,055
அல்லாதார்	30,473

கலசப்பாக்கம்

காங்கிரஸ்	2,460
அல்லாதார்	17,454

வண்ணாரப்பேட்டை

காங்கிரஸ்	9 914
அல்லாதார்	27,846

வேடசந்தூர்

காங்கிரஸ்	11,779
அல்லாதார்	29,008

குண்டூர்

காங்கிரஸ்	11,359
அல்லாதார்	36,690

பொன்னூர்

காங்கிரஸ்	8,140
அல்லாதார்	46,125

விநுகொண்டா

காங்கிரஸ்	4,332
அல்லாதார்	27,747

கோவூர்

காங்கிரஸ்	9,290
அல்லாதார்	35,129

கனிகிரி

காங்கிரஸ்	5,701
அல்லாதார்	30,385

சோக கீதம் பாடுகிறது! சோபிதத்துடன் உலவிய காங்கிரஸ்!

மதுகோல்

காங்கிரஸ் 7,304
அல்லாதார் 25,721

விசாகை

காங்கிரஸ் 3,926
அல்லாதார 25,735

கோட்டக்கல்

காங்கிரஸ் 9,498
அல்லாதார் 26,764

பெரிந்தலமன்னு

காங்கிரஸ் 9,146
அல்லாதார் 34 901

காங்கிரஸ் கட்சி தோற்றிருக்கிற 190 தொகுதிகளிலே, உதாரணத்துக்காக 21 தொகுதிகள் மட்டும் மேலே தரப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு தொகுதியிலேயும் காங்கிரஸ் கட்சி பெற்றுள்ள ஓட்டுகளின் எண்ணிக்கையையும், காங்கிரசல்லாதார் பெற்றுள்ள ஓட்டுகளின் எண்ணிக்கையையும் கூர்ந்து கவனியுங்கள்! காங்கிரஸ் கட்சி பெற்றுள்ள தோல்வி எவ்வளவு பிரம்மாண்டமானது என்பது நன்கு தெரியும். ஏறத்தாழ ஒவ்வொரு தொகுதியிலேயும், காங்கிரஸ் பெற்றுள்ள ஓட்டுகளின் எண்ணிக்கை நாலாயிரம், ஐயாயிரம், ஏழாயிரம் என்ற அளவில்தான் நிற்கின்றன. ஆனால் எதிர்க்கட்சிகள் பெற்றுள்ள ஓட்டுகளோ, இருபதாயிரம், முப்பதாயிரம், நாற்பதாயிரம என்கிற உயர்ந்த அளவில் செல்கின்றன.

காங்கிரசை ஆதரிப்பவர்கள் மிகச் சிலர்—அதனை எதிர்ப்பவர்களோ மிகப் பலர்—என்கிற உண்மையைத்தான் இந்த எண்ணிக்கை வேறுபாடு, முரசறைந்து தெரிவிக்கிறது.

காங்கிரஸ் கட்சி தோற்றுப்போயுள்ள இடங்களில் தான் இந்த வட்கக்கேடான நிலை பெற்றிருக்கிறது அந்தக் கட்சி என்று சொல்லி ஆறுதல் அடைய முடியாது காங்கிரஸ் தலைவர்கள். அந்தக் கட்சி வெற்றி பெற்றுள்ள இடங்களிலேயும், பெரும்பாலும், இதே நிலைதான் பெற்றிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

எடுத்துக்காட்டாக, இதோ, அவர்கள் வெற்றி பெற்றுள்ள சில தொகுதிகள்:—

திருவண்ணாமலை

காங்கிரஸ் கட்சி பெற்றுள்ள வோட்டுகள் 21,579
காங்கிரசல்லாதார் பெற்றுள்ள வோட்டுகள் 44,374

கோயமுத்தூர்

காங்கிரஸ் 21,408
அல்லாதார் 27,845

தலைவாசல்

காங்கிரஸ் 14,738
அல்லாதார் 22,531

மதுரை தெற்கு

காங்கிரஸ் 20,888
அல்லாதார் 23,543

இராணிப்பேட்டை

காங்கிரஸ் 17,934
அல்லாதார் 28,489

வேலூர் (வ. ஆ.)

காங்கிரஸ் 23,422
அல்லாதார் 65,645

ஆற்காடு

காங்கிரஸ் 13,613
அல்லாதார் 20,015

சீயாழி

காங்கிரஸ் 18,622
அல்லாதார் 32,046

திருப்போரூர்

காங்கிரஸ் 9,580
அல்லாதார் 15,990

நிலக்கோட்டை

காங்கிரஸ் 23,120
அல்லாதார் 39,994

மதுக்கரை

காங்கிரஸ் 18,835
அல்லாதார் 30,819

நன்னிலம்

காங்கிரஸ் 26,482
அல்லாதார் 71,714

திருவல்லிக்கேணி

காங்கிரஸ் 14168
அல்லாதார் 25,541

திருச்சி தெற்கு

காங்கிரஸ் 9.710
அல்லாதார் 22,825

குடியாத்தம்

காங்கிரஸ் 24,118
அல்லாதார் 68,132

சைதாப்பேட்டை

காங்கிரஸ் 16,806
அல்லாதார் 42,770

கள்ளக்குறிச்சி ரிசர்வ்

காங்கிரஸ் 24,874
அல்லாதார் 36,855

ராபூர்

காங்கிரஸ் 10,305
அல்லாதார் 28,410

பிரதிபாடு

காங்கிரஸ் 15,180
அல்லாதார் 41,988

அனபார்ட்டி

காங்கிரஸ் 16,148
அல்லாதார் 30,616

பொன்னுளி

காங்கிரஸ் 32,619
அல்லாதார் 56,218

காங்கிரசே! காங்கிரசே! கடைசியில் உன் கதி இதுதானா?

கள்ளிக்கோட்டை

காங்கிரஸ்	19,533
அல்லாதார்	35,885

இந்தத் தொகுதிகளிலெல்லாம் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றிருக்கிறது.

வெற்றி பெற்றிருக்கிறதே தவிர இந்தத் தொகுதிகள் ஒவ்வொன்றிலேயும் வெற்றி பெற்றுள்ள காங்கிரஸ் அபேட்சகர் பெற்றுள்ள ஓட்டுகளைவிட வெற்றி பெறாத காங்கிரசல்லாதார் பெற்றுள்ள ஓட்டுகளே அதிகம்!

காங்கிரஸ் அபேட்சகர் பெற்றுள்ள ஓட்டுகள் மிகக் குறைவு.

அல்லாதார் பெற்றுள்ள ஓட்டுகள் மிக அதிகம்.

என்றாலும் இங்கெல்லாம் வெற்றி பெற்றவர் காங்கிரஸ்வாதி!

தோல்வியுற்றவர் பிறகட்சிக்காரர்கள்!!

குறைவான ஓட்டுகளைப் பெற்றிருந்தும் கூட, இங்கேயெல்லாம், காங்கிரஸ் உறுப்பினர்களே வெற்றி பெற்றுள்ளார்கள் என்றால், அதற்குக் காரணம், இங்கெல்லாம் காங்கிரசை எதிர்த்து ஒரே ஒரு அபேட்சகர் நிற்கமுடியாமல் நான்குபேர், எட்டுப்பேர், பத்துப்பேர், சில இடங்களில் பதினைந்து, அல்லது இருபதுபேர் என்ற விதத்திலே நிற்கும்படி நேர்ந்ததே யாகும்.

காங்கிரசை எதிர்த்து நின்றவர்களின் ஓட்டுகள் இவ்வண்ணமாகச் சிதறிப்போன ஒரே காரணத்தால் தான், காங்கிரஸ், இங்கெல்லாம் வெற்றிபெற முடிந்திருக்கிறது.

ஆனால் காங்கிரஸ்காரர்களால் இங்கெல்லாம் வெற்றி பெற முடிந்ததே தவிர மொத்த ஓட்டர்களிலே பெரும்பாலோரைத் தங்கள்பக்கம் ஈர்க்கமுடியவில்லை;

காங்கிரஸ் கட்சி தோற்றுப்போயுள்ள தொகுதிகளிற் போலவேதான், அது வெற்றி பெற்றுள்ள தொகுதிகளிலேயும், அதனை ஆதரித்து ஓட்டுப் போட்டவர்கள் மிகச் சிலர். அதனை எதிர்த்து வாக்குரிமை அளித்தவர்கள் மிகப் பலர்.

தோற்றுப்போன இடங்களிலும் சரி, வெற்றி பெற்ற இடங்களிலும் சரி, காங்கிரஸ் கட்சி, பொதுமக்களின் நம்பிக்கையை இழந்து விட்டது என்கிற உண்மையைத்தான், நாம் மேலே தந்துள்ள புள்ளி விவரங்கள், தெள்ளத் தெளிய விளக்கிக் காட்டுகின்றன.

தொகுதி தொகுதியாக, காங்கிரஸ் பெற்றுள்ள வோட்டுகள் எவ்வளவு, அல்லாதார் பெற்றுள்ள வோட்டுகள் எவ்வளவு என்பதைக் கணக்கிட்டுப் பார்க்காமல், மொத்தமாக, சென்னை மாகாணம் முழுமைக்குமாக, காங்கிரசும், அல்லாதாரும் பெற்றுள்ள வோட்டுகளைக் கணக்கிட்டுப் பார்த்தாலும் இந்த உண்மை நன்கு புலனாகும்.

சென்னை மாகாணத்தில், 28—1—52 திங்கட்கிழமை காலைவரை கணக்கிடப்பட்டதில், பதிவாகியுள்ள மொத்த வோட்டுகளின் எண்ணிக்கை, 1,64,34,799.

இதில் காங்கிரஸ் கட்சிக்குக் கிடைத்துள்ள வோட்டுகள் 58,70,854.

அல்லாதாருக்குக் கிடைத்துள்ள வோட்டுகள் 105, 63, 945.

ஆமாம் தோழர்களே, "காங்கிரஸ் கட்சிதான் எங்களுடைய நம்பிக்கையைப் பெற்றுள்ள கட்சி" என்று கூறி வோட்டளித்திருப்பவர்களின் தொகை 58 லட்சம்தாம்!

அதே நேரத்தில், "வீழ்க காங்கிரசாட்சி" என்று வீர முழக்கமிட்ட வண்ணம் ஏனைய கட்சித் தோழர்களுக்கு வாக்குரிமைகளை அளித்திருப்பவர்களின் எண்ணிக்கை 105 லட்சம்.

58 லட்சம்—காங்கிரசுக்கு!

105 லட்சம்—அல்லாதாருக்கு!

மக்கள் மன்றம் காங்கிரசை வெறுத்து ஒதுக்குகிறதே தவிர விரும்பி வரவேற்கவில்லை என்பதை விளக்க இன்னமுமா ஆதாரம் தேவை?

சதவிகிதக் கணக்குப்படிப் பார்த்தால், காங்கிரசை ஆதரிப்பவர்கள், 100க்கு 36.

அதனை எதிர்ப்பவர்கள், 100க்கு 64.

இன்னமும் சுருக்கமாகவும் தெளிவாகவும் சொல்ல வேண்டுமானால், மொத்த ஓட்டர்களிலே ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்கு பேர் காங்கிரசை எதிர்க்கின்றனர். ஒரு பங்கு பேர்தான் ஆதரிக்கின்றனர்.

தொகுதிவாரியாகப் பார்த்தால், 188 ஸ்தானங்கள்-காங்கிரசுக்கு! 190 ஸ்தானங்கள் அதனை எதிர்ப்பவர்கட்கு!

மொத்த ஓட்டர்களின் எண்ணிக்கைப்படிப் பார்த்தால், 58 லட்சம்தான் காங்கிரசுக்கு! 105 லட்சம், அதனை எதிர்ப்பவர்கட்கு!

சதவிகிதக் கணக்குப்படிப் பார்த்தால், 36—காங்கிரசுக்கு! 64—எதிர்ப்பாளர்கட்கு!

சுமார் கணக்குப்படிப் பார்த்தால் 3,ல் 1 காங்கிரசுக்கு! 3-ல் 2 எதிர்ப்பாளர்கட்கு.

எந்தக் கணக்கை எப்படிப் போட்டுப் பார்த்தாலும் சரி காங்கிரஸ் கட்சி சென்னை மாகாணத்துப் பொதுமக்களால் முழு மனதுடன் வெறுத்து ஒதுக்கப்பட்டு விட்டது என்கிற உண்மையை, எவராலும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. மறக்கவும் முடியாது.

ஐயோ பாவம்! காங்கிரசே! கடைசியில் உன் கதி இப்படியா ஆக வேண்டும்!

தி. மு. க. ஆதரவில்

வெற்றி பெற்றவர்களுக்குப் பாராட்டு

அண்மையில் நடந்த பொதுத் தேர்தலில நமது ஆதரவு பெற்று இதுவரையில் சென்னை சட்டசபைக்கு 36 உறுப்பினர்களும் பார்லிமெண்ட் மக்கள் சபைக்கு 6 பேர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் தி. மு. கழக சார்பில் விருந்தும் பாராட்டு விழாவும் மிகப் பெரிய அளவில் காஞ்சிபுரத்தில் நடத்த ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

விழா நடத்தும் தேதி விரைவில் அறிவிக்கப்படும்.

சொற்ப பிரதிகளே எஞ்சி உள்ளன! வேண்டுவோர் உடனே தெரிவிக்க!

திராவிடர் டைரி—1952

இந்த ஆண்டின் நாட்குறிப்பில்

* அறிஞர் அண்ணாதுரையின் சென்ற 15 ஆண்டு காலப் பேச்சு, எழுத்து ஆகியவற்றிலிருந்து அரிதின் முயன்று திரட்டப்பட்ட அரிய பொன்மொழிகள் ஒரு நாளைக்கு ஒன்று வீதம் 365—இவை, சென்ற இரண்டு ஆண்டு டைரிகளிலும் வெளிவராதவை, புதியவை, சிறந்தவை.

* தி. மு. க. பொதுச்செயலாளர் அண்ணாவின் புதிய புகைப்படம்.

* தி. மு. க. மாநிலமாநாட்டின் திறப்பாளர் நீலமேகம், கண்காட்சித் திறப்பாளர் சிற்றரசு, விளம்பரச் செயலாளர் கருணாநிதி, செயலாளர்கள் மணிமொழியார்—மனோகரன், வரவேற்புத் தலைவர் என். வி. நடராசன் ஆகியோரின் படங்கள்.

* தி. மு. க. கொடி. இரு நிறத்தில்

* மதுரைப் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்டகழகச் சட்டதிட்டத்தின் சுருக்கம்.

* கழக மாளிகையின்புகைப்படம்.

* தலைமைக் கழகப் பொதுக்குழு, துணைக் குழுக்களின் விவரங்கள், உறுப்பினர் பெயர்கள்

* தி.மு.க, கிளைகள் 670ன் விவரங்கள், அவற்றின் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், விளம்பர உறுப்பினர் பெயர்கள்—மாவட்ட வாரியாக

* மாவட்டக் கழகங்களின் விவரம்

* தி.மு. மாணவர் கழகவிவரங்கள், செயல் உறுப்பினர் பெயர்கள்.

* திராவிடர் கொண்டாடுதற்குரிய திருநாட்கள்

* அரசினர் விடுமுறை நாட்கள்

* தபால் தந்தி கட்டண விவரங்கள், விற்பனைவரி வருமான வரி விவரங்கள், ஆவணப் பதிவு (ரிஜிஸ்ட்ரேஷன) கட்டணங்கள் மற்றும்பல இன்றியமையாத குறிப்புகள்.

அழகான அமைப்பு 570 பக்கங்கள் விலை ரூ. 1-0-0

ஒரு பிரதி வேண்டுவோர் சாதாரணத் தபாலில் அனுப்ப ரூ, 1—2—0-ம், பவுத் தபாலில் அனுப்ப ரூ. 1—6—0-ம் அனுப்பவேண்டும்,

விற்பனையாளர் கழிவு 20% அனுப்பும் செலவு வேறு.

முன்பணமின்றி எவருக்கும் அனுப்பப்பட மாட்டாது.

போர்வாள் அலுவலகம்

பவழக்காரத் தெரு, சென்னை 1.

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியை அவன் கேள்விப்பட்டதும், அவன் உள்ளமே வெடித்திடுவது போன்ற நிலை பெற்றுவிட்டான். தான் உயர்வாழ வேண்டுமென்ற காரணத்துக்காகத் துப்பாக்கி குண்டுகளைத் தாங்கி மாண்டுபோன மாது சிரோமணி பெஸ்ஸாக்காக அழுது அழுது கண்ணீர் வடித்தான். அவனது இன்பப்புறு...பறந்துவிட்டது. கலையையும்—காதலையும் இணைத்துப் பேசிய நாடோடியின் உள்ளம் காதலை இழக்க வேண்டிவந்தது. ஒன்றைப்பிரிந்து மற்றொன்றோடு அவன் உள்ளம் ஒட்டிவாழ விரும்பவில்லை. நாடோடியின் இதயத்திலே அரும்புவிட்டு வளர்ந்த அழகு ரோஜா பட்டுவிட்டதைக் கண்டு, இன்பச் சோலையிலே அழகு கீதம் பாடிய இன்பக் குயில் பறந்துவிட்டதைக் கண்டு, காதல் தென்றல் மறைந்து...துன்பப் புயல் அவன் வாழ்விலே வீசியதைக் கண்டு,... அதுமாதிரியான தொல்லை நிலைகளெல்லாம் தாங்கிக்கொண்டு அவனது கலைத் தொழிலிலே மேலும் மேலும் முன்னேறும் விருப்பமின்றி...அழிந்துவிட்ட ரோஜாவைப் போல தானும் அழிந்து, பறந்துவிட்ட இன்பக் குயிலைத் தேடி அவனும் பறந்து செல்லத் துடித்தான். காதலி பெஸ் சாவிலே இன்பங்கண்டாள்........இவனும் அதைத்தான் விரும்பினான். காதல் எண்ணங்கள் மோதிய உள்ளத்தோடு குதிரையிலே அமர்ந்து வேகமாகச் சென்றுகொண்டிருந்தான். நாடோடி விடுதிக்குப் போகும் பாதையிலே குதிரை என்றுமில்லாத வேகத்துடன் பறந்துகொண்டிருந்தது! பாதையிலே வந்துகொண்டிருந்த துப்பாக்கி வீரர்கள் குதிரைமீது அமர்ந்தபடி வேகமாகச் சென்றுகொண்டிருக்கும் நாடோடியை வேட்டை நாயைச் சுடுவதுபோலச் சுட்டுத் தீர்த்தனர்.

ஆம்! அவன் ஆவலுடன் தேடிச் சென்ற மரணத்தை அவர்களாகவே அவனுக்கு ஆசையுடன் தேடி எடுத்துக் கொடுத்துவிட்டனர். மட்டற்ற மகிழ்ச்சியுடன் மரணப் பள்ளத்தில் குதித்துவிட்டான் நாடோடி. நாடோடியையும் பெண்ணையும் இணைத்துவைக்க மறுத்துவிட்டது உலகம். ஆனால் மரணம் அந்தக் காரியத்தை அற்புதமாகச் சாதித்துக் காட்டிவிட்டது!

—

பிறநாட்டு எழுத்தோவியம்:

நாடோடியின் காதல்!

[தங்கவேலர்]

[ஆங்கில நாட்டின் உயிர்க் கவி (ALFRED—NOYES) ஆல்பிரட் நோயிஸ், "ஹைவே மென்" என்ற பெயரிலே காவியக்கதையொன்றைத் தீட்டியிருக்கிறார். இழந்த காதலான அந்த இன்பக் காவிய ஓவியம்தான் இங்குச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது எழில் மிகு முறையில்.]

பயங்கரமான இருட்டு. இடையிடையே மின்னல் வீச்சு. வீசுங் குளிர் காற்று வேறு பாதையிலே யாரையும் நடமாட விடாதபடி தாக்கிக் கொண்டிருந்தது. ஊரின் ஒதுப்புறத்திலேயிருந்தது அந்தத் "தங்கும் விடுதி". பகலெல்லாம் உல்லாசத்தின் இருப்பிடமாகப் பணியாற்றிய அந்த விடுதி நிசப்தமான இந்த இரவினிலே நிம்மதியாகிக் கிடந்தது. கோமள வல்லிகளும் கோமான்களும், இடை சேர்த்து, இன்ப நடைபயின்று, கனிமொழி பேசிப் பகலெல்லாம் களித்துக் கிடந்தவர்கள் கம்பளி உடைகளுக்குள்ளே புதைந்து கவலையற்றுத் தூங்கிக் கிடந்தனர். அந்த வட்டத்துக்கே அந்த விடுதியொன்றுதான் நாகரீகக்கூடம்! ஓய்வை உல்லாசமாக்கிட எண்ணுபவர்கள் விடுதியிலேதங்குவதுண்டு. சுவைதரும் கனிரசம், சுந்தர மொழி பேசிடும் ஆட்டத்திலே நாட்டம் கொண்டிட்ட ஆரணங்குகள், வேடிக்கைக் காட்சிகள், எல்லாம் அங்கே வட்டமிட்டுக் கிடந்தன. கவலையை மறக்க விரும்பியவர்களின் பட்டாளம், உல்லாசத்தை விலைக்குவாங்கப் போட்டியிட்ட சீமான்களின் கூட்டம், எல்லாமாக அங்கே திரண்டிடத்தான்செய்தது!

உல்லாசவாசிகளுக்கு விருப்பியதை அளித்து வந்த அந்த விடுதியை நோக்கித்தான், இரவு நேரத்திலே, கொட்டும் பனியையும் சட்டை செய்யாது, குதிரை வீரனொருவன் வந்து கொண்டிருந்தான்! குதிரையின் காலடி ஓசை அந்த நள்ளிரவு வேளையிலே விடுதியின் புரண்டு கிடந்த யாரையும் கவரா விட்டாலும்......விடுதியின் மேல் மாடியிலே விழித்துக் கிடந்த பெஸ்ஸைக் (BESS) குதூகலத்திலே சிக்க வைத்தது. நிமிடத்துக்கு நிமிடம் அழகி பெஸ் அந்த வரவை எதிர் நோக்கி இன்புற்றிருந்தாள். வேதனையளித்துக் கொண்டிருந்த வேளைக்கு முடிவு கூறிவிட்டு, இன்ப அத்தியாயத்தை வரவேற்றுத் துவக்கத் துடித்திருந்தாள்.

குதிரையிலேவந்தவனோ நாடோடி கொள்ளைக்காரன்! குமரியோ—தங்கும் விடுதியின் உரிமையாளனின் அன்பு மகள்! இந்த இருவருக்கும் தொடர்பேற்படுத்தி வைத்தது காதல் பாதை. எங்கெங்கோ சுற்றியலைந்து என்னென்ன நிகழ்ச்சிகளிலேயோ எண்ணத்தைப் பதித்து வந்த அந்த நாடோடி, விடுதியிலேயிருந்த பாகுமொழி பேசும் விழியழகாளைக் கவர்ந்துவிட்டான்! கொள்ளைத் தொழிலில் தொல்லை கண்ட நேரத்தில் வீணாகிக்கொண்டிருக்கும் காலத்தை உல்லாசமாக்க "விடுதி"யிலே அந்தநாடோடி தங்குவதுண்டு. மாலை நேரத்திலே, அக்காலங்களிலே, விடுதியின் சற்று தொலைதூரத்திலே, நாடோடி உலவி இயற்கையின் எழிலைச் சுவைத்துக் கொண்டிருப்பான் வழக்கமாக. அவன் உலவிக்கொண்டிருந்த மாலைவேளையிலேதான் அந்த உல்லாசி "பெஸ்", நாடோடியின் உள்ளத்தை அழகு வலைபோட்டு இழுத்தாள்.

இதயத்தைஇரும்பாக்கிக்கொண்டிருப்பவன், மனிதப்பண்பு இழந்துவிட்ட முரடன் என்றெல்லாம் நாடே இழித்துக் கூறிய அந்த நாடோடியின் இதயத்தைத்தான் பெஸ் ஆக்ரமித்துக்கொண்டு ஆட்சி புரியத் துவங்கினாள், பார்வையால் பாசத்தை அள்ளி வீசிக்கொண்டிருந்த அந்தப் பாவையை...கிளிமொழியை நேருக்கு நேராகவே சந்தித்து உரையாடினான். அவனது மன வேதனையையெல்லாம் அவளின் முன்பே குவித்தான் காலவேகம் அவனது கருத்துக்கு ஒத்திருந்த நேரத்திலே!

வளர்ந்து வந்த நாட்கள், "நாடோடி—பெஸ்" காதலை மலர வைத்துக்கொண்டிருந்தன. அந்த வரிசையின் எண்ணிக்கையைப் பெருக்கிவந்த ஒரு நாள்தான் துவக்கத்திலே தீட்டப்பெற்றிருப்பதும்.

......குதிரையின் காலடி ஓசை கேட்டு ஓடோடி எழுந்துவந்த பெஸ், விடுதியின் ஓரமாக வந்து நின்றாள். அழகே உருவான அந்த ஆரணங்கின் சிரிப்பொலி, அந்தக் கும்மிருட்டிலும், அவளிருக்குமிடத்தைக் காதலன் நாடோடிக்கு அறிவித்துக்கொண்டிருந்தது. ஓசைப் படாமல் குதிரையை மரத்தடியிலே கட்டிவிட்டு இன்பப் புறாவை எட்டி அணைத்தான். அவனுடைய தடந்தோளிலே துவண்டுகிடந்த அந்தக் கனிமொழியாள் தன் தாமரை உதடுகளைத் திறந்தாள் வார்த்தை முத்துகளைக் கொட்ட. பசும்புல்தரையிலே கொட்டும் குளிரை லட்சியம் செய்யாது சாய்ந்து படுத்திருந்த அந்த நாடோடி தன் காதல் கனிமொழியாள் வீசிக்கொண்டிருந்த முத்துகளை ஒன்றுவிடாமல் தேடிப் பிடித்துத் தன் இதயச்சிறையிலே அடைத்துக்கொண்டிருந்தான். இரவை இன்பமாக்கிக்கொண்டு காலத்தை வார்த்தை ஜாலத்தால் தேய்த்துக்கொண்டிருந்தார்கள் அந்தக் காதல் புறாக்கள் இருவரும்.

* * *

"அன்பே! உல்லாசி! எங்கோ போகவேண்டியவனை இங்கே சிறைப்படுத்திவிட்டாயே! என் இலட்சியமும் செயலும் சற்று நேரத்திலே சிதைக்கப்பட்டுவிட்டனவே! அரசாங்கத்தாரின் துப்பாக்கிக் குண்டுகள்......என்னை எதிர்க்க நினைக்கும் எத்தர்களின் தாக்குதல்......இவற்றையெல்லாம் சாமானியமாக மதித்துப் போராடியிருக்கிறேன். ஆனால் உன்னிடம் அந்த என் வீரமெல்லாம், என் இலட்சியமெல்லாம் செயலற்றதாகிவிடுகின்றனவே. என் தோழி

விலே குறுக்கிடும் யாராயிருந்தாலும் கொடியிலே தூள்தூளாக்கிவிடும் துடிதுடித்த உள்ளத்தைக் கொண்டவன் நான். கொட்டும் பனியும் கும்மிருட்டும்தான் என் தொழிலுக்கு மிக சம்பந்தமுடையவை. காயும்நிலவு காதலர்களுக்குக் களிப்பைத் தரலாம்! ஆனால் எனக்கோ... அது வேம்பு! எத்தனையோ நிலவுக் காலங்களிலே நான் பட்ட தொல்லை சொல்லிமுடியாதது. என் கொள்ளைத் தொழிலோ இருட்டு நேரத்திலேதான் நடைபெற வேண்டியது. அப்படியிருக்க வெளிச்சத்தை வாரி வழங்கும் வெண்ணிலவு நிம்மதியையா தரும்? இதுமாதிரியான கும்மிருட்டுக் காலங்கள்கிடைத்திடுவது அரிதரிது! மோகனாங்கி நான் விடைபெறுகிறேன்! இந்த நேரத்திலே என் தொழிலைத் திறம்பட நடத்திட, உன் இசைவைத்தா! நான் சென்று வரட்டுமா?"

"அன்பரே! நீர் ஓர் கொள்ளைக்காரர்—வீடு, நாடு இவையெல்லாம் அற்ற நாடோடிக் கூட்டத்தைச் சேர்ந்தவர் என்றெல்லாம் தெரிந்திருந்தும்தான் உங்களைக் காதலிக்கிறேன், என் உள்ளநிலையிலே தாங்களிருப்பதால்! கண்ணாளா! உங்களின் தொழில் நம் இருவரையும் அறிமுகப்படுத்தி வைக்கவில்லை. இரண்டு இதயங்கள் இன்பபேரிகை முழக்கிக் காதல் கீதம் இசைத்த காரணத்தாலேயே நாம் இருவரும் ஒருவராக்கப் பட்டிருக்கிறோம். நானோ அந்தக் காதல் கீதத்தை இனிமையோடு பாட முனைகின்றேன். ஆனால் தாங்களோ... இரவு நேரம், தொழில் என்றெல்லாம் பிதற்றி இன்ப இரவைத் துன்ப இரவாக்க முயற்சிக்கின்றீர்கள். என்னருமை நேசரே! இந்த இரவு வீணாகவே போகட்டும் உங்களின் தொழில் அளவிலே!......ஆனால் என்னைப் பாருங்கள்! முகத்திலே மின்னிக் கொண்டிருக்கக் கூடிய இந்த இன்ப ரேகையை வளர்த்துக் கொண்டேயிருப்பதிலே நானும் பூரிப்படைவேன்! அதைக் கண்டு தாங்களும் மகிழ்ந்திருக்கலாமல்லவா? தனிமையிலே, இரவின் கோரத்திலே என்னைச் சிக்கவைத்து விட்டு உங்கள் தொழிலிலே இன்புற்றிருக்கச் செல்லத் துடிதுடிக்கிறீர். நியாயமா?"

"கனிமொழியே! என் இதயத்தை உன் இதயமாக ஆக்கிக் கொண்ட உன்னிடமிருந்தா இந்த வார்த்தை அம்புகள் பறந்துவருகின்றன! நம்ப முடியவில்லையே என்னால் என் அன்புத் தொழிலையும், உன்னையும் தவிர இந்த உலகிலே நான் வேறு எதையும் நேசிக்கவில்லை உயிருக்கு உயிராக! உன்னை அன்போடு அணைத்துப் பூரிப்பு உலகிலே உலவுகின்ற நேரத்திலே...உன்னைப் போலவே பாவித்து வரும் என் அருமைத் தொழிலை மறந்துவிடுவது நியாயமுள்ளதா? உன் இன்பத்தை, எழில் கூட்டும் சுவையை, நீ விரிவாக எடுத்துக்காட்டுகின்ற நேரத்திலே... என் உள்ளம் தொழிலின் சூழ்நிலையிலே ஒட்டிக்கொண்டிருப்பதைக் காண மறந்துவிடுகின்றாயே! என் தொழில்! அது நான் இலகுவிலே, மறந்துவிடக் கூடியதா? வெண்ணிலவு போன்றவளே! நீயே யோசித்துப் பார்!"

"காதல் சுவையே! கண்ணனையாளே......கனிரசத்தின் இனிமையே! என்றெல்லாம் தித்திக்கப் பேசிய நீங்கள், இப்போது தொழில்—தொழில் என்று விம்முகின்றீர்களே! நான் வெளிப்படையாகவே கேட்கிறேன், தொழிலா அது?—இரவிலே கொள்ளையடிப்பதை, சுவருக்குச் சுவர் தாண்டி ஓடிப் பதுங்கிடுவதைத் தொழில் என்று வர்ணனை செய்கின்றீர்களே! கொள்ளையடிப்பது உங்களுக்கு இன்பத் தொழிலா? கூடாது! நான் கண்டிப்பாகவே கூறுகிறேன். கண்டவரைக் கொலைசெய்து, கிடைத்ததைக் கொள்ளையிட்டுச் செல்லும் அந்த இழி செயலை, புனிதமான கருத்தமைந்த "தொழில்" என்ற வார்த்தையால் இனிமேலும் அழைக்காதீர்கள். காதல் பாதை இனிமேலும் கரடுமுரடானதாக இல்லாதிருக்கவேண்டுமானால், அன்பரே, நிச்சயம் நீங்கள் அந்தக் கொள்ளைத் தொழிலை விட்டுத்தானாக வேண்டும். என் அன்புவேண்டுகோள் இது. மறுக்காதீர்கள். நமது தூய காதலை முன்வைத்துக் கேட்கிறேன், எனக்காக உங்கள் தீய செயலை நீங்கள் கைவிட்டுத்தானாகவேண்டும்!"

"கூவுங்குயிலே! என் தொழிலை ...கலையை தீய செயல் என்று கூறுகிறாயே! கூறலாமா? மாளிகை வாசிகளிடம் மலையெனக் குவிந்திருக்கும் பொருள்களிலே துளியளவு கொள்ளையடித்து, அந்தப் பொருளை, மக்கள் வாழ, ஏழை எளியவர் வாழ, அவர்களுக்குத் தருகிறேன் காணிக்கையாக! அது எனது கலைவில்லிலேயிருந்து பறக்கும் அம்பு விம்மிப்புடைத்திருக்கும் மாளிகை வாசியின் உடலிலே மோதி இரத்தக் குறியை ஏற்படுத்துவது எனக்கு ஒரு கலை...காட்சிக்கு விருந்து! நான் கொள்ளைக்காரன் என்று குற்றம் சாட்டுகிறாய் என் நிலையைத் தவறான கோணத்திலேயிருந்து பார்ப்பதால். நான் பழைய காதலனே தான். உன் விழியும் என் மொழியும் என்று ஒன்றாக இணைந்து பேசத் துவங்கினவோ அன்றிலிருந்து இன்றுவரை சிறிதும் மாற்றமின்றி ஒரே காதல்பாதையிலே நடந்து வருபவன்தான். இந்தப் பாதையிலே பிளவும் பேதமும் என்னால் அரும்புவிடுவதாக நீ எண்ணிக்கொள்ளுகிறாய் தவறான பீடத்திலே நீ நின்றுகொண்டு பார்ப்பதால்! பைங்கிளியே! என் கலையை, தொழிலைக் குற்றம் சாட்டாதே...அது என்னையும் உன்னையுமே குற்றம் சாட்டிக்கொள்ளுவதாக அமையும். நமது நிலையை நன்றாக உணர்ந்திருக்கின்றேன். இந்த துன்ப நிலை நீடிக்கவேண்டுமானால் என் கலை—ஜீவலட்சியம் நாட்டிலே உலவியாகவேண்டும். உன்னையும்நான் மறக்க முடியாது. என் கலையையும் நான்மறக்க முடியாது. தகாத எண்ணங்களை உள்ளத்திலே நடமாடவிட்டுக்கொண்டு உன் வாழ்க்கையை வேதனை மயமாக்கி கொள்ளாதே. நம் அன்பு வளரவேண்டும் — அதைமட்டும் மறந்துவிடாதே! நாளை இரவு வருகின்றேன். இன்று இடையே அறுந்துவிட்ட இன்ப அத்தியாயத்திலிருந்து நாளை மீண்டும் தொடர்ந்து துவங்கலாம்."

காதலன் நாடோடி, காதலி பெண்ணிடம் விடைபெற்றுக்கொண்டு அவனது கலையை வளர்க்க ஓடோடிச் சென்றுவிட்டான். நாடோடிக் காதலன் தன் திருட்டுக் கலையிலே நிலை மயங்கியிருந்த நேரத்திலே, அழகி பெண், அன்பு வேதனையிலே சிக்கிக் காதல் காய்ச்சலால் தவித்துக்கொண்டிருந்தாள். தங்கும் விடுதியிலே குதிரைகளைக் கவனித்து வந்தான் டிம் என்ற நாசகாரன். குதர்க்க புத்திபடைத்த அவன்,

பெண்ணை நீண்ட நாட்களாகவே அவளுக்கு அறியாமல் காதலித்து வந்தான். குதிரைகளினருகிலே குமரி ஓடி ஆடுகின்ற நேரத்திலே ஒரு நாள் டிம் தன் உள்ளத்தைத் திறந்தே காட்டிவிட்டான்.

......"உன்னைக் காதலிக்கிறேன் அன்பே! என்னை வேதனையால் தாக்காதே"......என்று காதல் மொழியைத் துவங்கிய டிம்மைப் பார்த்து, "முட்டாளே!" என்று கூறிவிட்டு பெண் ஓடி மறைந்துவிட்டாள். அந்த இழிமொழியையும்—! காதல் நோயையும் மறக்கவே முடியவில்லை டிம்மால் பலகாலமாக சூழ்நிலை இந்த அளவிலே விரிந்திருந்த நேரத்திலேதான்......இரவு நேரத்திலே நாடோடிக் காதலனோடு பெண் சிரித்துப் பேசி மகிழ்ந்திருந்ததைக் கண்டுவிட்டான் டிம்! நாடோடியும் பெண்ணும் இருட்டு நேரத்திலே நடத்திய திருட்டுக் காதலை நேரிலே கண்ட "டிம்" பழிதீர்த்துவிடத் துடித்தான்.

காலை மலர்ந்தது! அழகி பெண்ணிடம் இரவு நிகழ்ச்சி பற்றி சரியான விளக்கம் கேட்டான். பதிலுக்காகச் சித்ரவதை செய்து பார்த்தான்.......விம்மலையும், விக்கலையுந்தான் பதிலாகப் பெற முடிந்தது! கொள்ளைக்காரன் சாதாரணமானவனல்ல...... அரசினரே நிமிடத்துக்கு நிமிடம் விலை போட்டுத்தேடிவரும்கொலைகாரன். அவனிடம் பாசங்கொண்டிடுவது......தங்கும் விடுதியே அந்த சதிகாரனின் திட்டத்துக்குகந்த சதிகூடமென ஆட்சிபுரியினரால் குற்றம் சாற்றப்பட்டு விடுதிவாசிகள் எல்லோருமே தொல்லை சுவைக்க வேண்டிய அபாயம் நேர்ந்துவிடுமே என "டிம்" கர்ஜித்தான்.

'காலை எப்படியும் வந்துவிடுவேன்" என நாடோடி கூறிச் சென்றதை தெளிவாக டிம் கேட்டிருந்தான். எனவே இரவு வரும் வரை தனி அறையிலே பெண்ணைப் பூட்டிவைத்திருந்து அறைக்குள்ளே இரண்டு துப்பாக்கி வீரர்களையும் காவலுக்கு வைத்திருந்தான். அறையிலே ஜன்னலோரத்திலே கயிற்றிலே பெண்ணைக் கட்டிவைத்து......அவள் கயிற்றை அறுத்து தப்பித்துக் கொள்ளாதிருக்க பெண்ணின் மார்பிலே குண்டு ஏற்றப்பட்ட துப்பாக்கியையும்......அசைந்தால் வெடித்துவிடும் நிலையிலே சாத்தி வைத்திருந்தான்.

பகல் தேய்ந்து இரவு அடியெடுத்து வைத்தது! பெண்ணின் மனம் போர்க்களமாகிக்கொண்டிருந்தது. தான் இறந்தாலும்...தன்னைத் தியாகம் செய்தாகிலும் காதலனைத் தப்புவிக்க பெண் உள்ளம் அலைமோதிக் கிடந்தது. நள்ளிரவு நெருங்கிக்கொண்டிருந்தது. மாதாகோவிலிலே மணியோசை பயங்கரமாக ஒலித்துக்கொண்டிருந்தது! துப்பாக்கி வீரர்கள் பாதை ஓரத்திலே அணிவகுத்து மறைந்திருந்தனர். நாடோடி, குதிரையிலே புயல் வேகத்திலே வந்துகொண்டிருந்தான். குதிரையின் காலடி ஓசை விடுதியிலே பட்டு எதிரொலித்துக் கொண்டிருந்த நேரத்திலே பெண் தன்னுடைய கைவிரலால் துப்பாக்கி விசையை இழுத்தாள் கட்டுண்ட நிலையிலேயே! "டுமீல்" சப்தம் இரவையே பயங்கரமாக்கியது! எல்லோருமே திகைப்புண்டுவிட்டனர் ...வேட்டுச் சத்தங்கேட்டு! ஆனால் அந்த "டுமீல்" சத்தத்தை எழுப்பிய குண்டுகள் பெண்ணின் மார்பைத் துளைத்துச் சென்றன. காதலனைக் காப்பாற்றிவிட்ட திருப்தி காரணமாக அந்தக் கடைசி நேரத்திலும் அவளுடைய முகத்திலே புன்னகை மின்னிக்கொண்டிருந்தது! வேகமாக விரைந்துகொண்டிருந்த அந்தக் குதிரை வீரன் நாடோடி, அந்தக் குண்டு வெடிக்கும் சத்தத்தைக் கேட்டு, வழியில் தனக்கு ஏதோ ஆபத்து காத்திருப்பதாக எண்ணி, குதிரையைத் திருப்பிக்கொண்டு வந்தவழியே சென்று விட்டான்' அவனைச் சுட்டு வீழ்த்த வேண்டுமென்று பேராவலுடன் பாதையிலே காத்திருந்த துப்பாக்கி வீரர் ஏமாற்றத்தோடு விடுதி வந்து சேர்ந்தார்கள்.

பெண்......இரத்த வெள்ளத்திலே மிதந்துகொண்டிருந்தாள்! மலர்ந்த காலைப்பொழுது, நகரமெங்கும், பெண்ணின் மரணச் செய்தியை, தியாகத் திருப்பணியை அறிவித்துக் கொண்டிருந்தது. நகரின் மத்தியிலே மாறுவேடத்திலே உலவிக் கொண்டிருந்த நடோடிக்கும் அந்தச் செய்தி எட்டாமல் போகவில்லை.

(13-ம் பக்கம் பார்க்க)

சிந்திக்கத் தூண்டும்

சிறந்த நூல்கள்!

மா. இளஞ்செழியன்

	ரூ.	அ.
இந்திய அரசியல் திட்டம்	2	0
தமிழன் தொடுத்த போர்	1	12
சரிந்த சாம்ராஜ்யம்	0	10

இராதாமணாளன்

மனப்புயல்	2	0
மூடுபனி	1	0
பசி	1	0
பாலைவனம்	0	10
துளிதேன்	0	8
புதுவெள்ளம்	0	8
மயானத்தில் முத்தம்	0	8
பேசும் பிணம்	0	8
சுந்தலீலா	0	8
தளபலி	0	6
அய்யோ கடவுளே	0	3
மதம் அவசியமா	0	3

பிற நூல்கள்

ஆலையூரார் உபதேசம் (CNA)	0	12
வந்தது விபத்து ,,	0	12
தீ பரவட்டும் ,,	0	8
போர்முரசு ,,	0	8
திரு. வி. க. மணிமடல்	1	8
கழைக்கூத்தியின் காதல்	1	0
அழகுராணி (க. அன்பழகன்)	1	4
வகுட்புரிமை போராட்டம் ,,	1	12
இன்ப இரவு (சேரன்)	0	8
என் மகள் ,,	1	0
உலகை திருத்திய உத்தமர்கள்	1	0
அதிசய தியாகிகள்	0	12
துடிக்கும் இளமை (கருணாநிதி)	0	8
உணர்ச்சியாலை ,,	0	8
கோவையில் கருணாநிதி ,,	0	8
வாழமுடியாதவர்கள் ,,	0	12
கருணாநிதி கருத்துரைகள் ,,	0	3
கயிற்றில் தொங்கிய கணபதி	0	3
கல்வி நீரோடை (செழியன்)	0	6
இதயக் குமுறல் (சதாசிவம்)	1	8
ஒழிக முதலாளித்வம் ,,	0	12
காரல் மார்க்ஸ் ,,	0	12
பெரியாரும் கவிஞரும் அண்ணாவும்	0	8
சிதைந்த வாழ்வு (நாடகம்)	1	4
கைதி (ஏ. கே. வேலன்)	1	4
பிரளய உலகம்	1	0

பகுத்தறிவுப் பாசறை

247, பவழக்காரத் தெரு, சென்னை

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras, Joint-Editor M. Ilancheliyan B.A. (Hons.)